பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 03 புதன்கிழமை (18-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:203

வடக்கு - கிழக்கில்

## உள்ளூராட்சித் தேர்தல்கள்: இறுதி நேரம்வரை இழுபறி!

### புதிய வேட்பாளர் பட்டியலைக் கோர நீதிமன்றம் அனுமதிப்பது கேள்விக்குறி

கொழும்பு,ஜூன்18

வடக்கு - கிழக்கில் உள்ள - ஐம்பதுக்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் பற்றிய விடயம் இறுதிநேரம் வரை இழுபறியில் உள்ளது. இந்தத் தேர்தல்களுக கென ஏற்கனவே ஒரு வருடத்துக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்தாமல் அந்தப் பட்டியலை ரத்துச் செய்துவிட்டு, புதிய வேட்பாளர் பட்டியலைக் கோரி தேர்தலை நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

அதற்கு வகைசெய்யும் விதத்தில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான திருத்தச் சட்டம் ஒன்றை அரசு முன் வைத்துள்ளது.

அந்தத் திருத்தம் குறித்து விசாரணை நடத்தியுள்ள உயர் நீதிமன்றம், அதுகுறித்துத் தனது கருத்தை சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், அத்தீர்ப்பு இருவருக்கும் இதுவரை கிடைத்துவிட்டதா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

நேற்றுமுற்பகல் வரை அது தமக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஜூன்18

மேல்மாகாண சபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் சுனில் மெண்டிஸ் நேற்று முன்தினம் இரவு 8.30மணியளவில் இனம்தெரியாத சிலரால், அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலக்கத்தகடு இல்லாத வெள்ளை நிற வானில் வந்தவர்கள், கைத்துப்பாக்கியினால் சுனில்மெண்டிஸை சுட்டுக்கொன்றனர். எனக் கூறப்படுகிறது.

சுனில் மெண்டிஸின் கொலை குறித்து நான்கு பொலீஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வரு

(14ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி முயற்சியைக் குழப்பவே கப்பல் தகர்ப்புச் சதித் திட்டம்?

## அமைச்சர்கள் கிளப்பும் சந்தேகம் விசாரிக்கத் தயாராகிறது அரசு

கொழும்பு,ஜூன்18

**முல்லைத்தீவு கடல் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சமாதானப் பேச்சுகளை குழப்பும் சதி முயற்சி எதுவும் இருக்கிறதா? இன்றேல், டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட சர்வதேச நாடுகளின் உதவிகள் கிடைப்பதை சீர்குலைக்கும் திட்டம் எதுவும் உள்ளதா? இவை குறித்து அரசாங்கம் ஆராய விருப்பதாக அறியப்படுகிறது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சர்களுடன் நடத்திய சந்திப்பில் அமைச்சர்கள் பலர் இச் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். இவ விடயங்கள் ஆராயப்படவேண்டும் எனவும் இதுதொடர்பாக அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்றும் அந்த அமைச்சர்கள் வினவியுள்ளனர்.

கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் குறித்து கேள்விகள் எழுப்பிய அமைசசர்கள், இச்சம்பவம் குறித்து ஜனாதிபதி செயலகம் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது. கடற்படையும் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது. இரு அறிக்கைகளிலும் முரண்பாடுகள் உள்ளன. இது குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்று அமைச்சர்கள் பிரதமரிடம் சரமாரியாக கேள்வி

(14ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு சம்பவம்:

## ஜனாதிபதி செயலகமும் கடற்படையும் முரண்பாடான இரண்டு அறிக்கைகள்!

கொழும்பு,ஜூன்18

முல்லைத்தீவுக்கு அப்பால் ஆழ் கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல், கடற்படையினரின் தாக்குதலிலா அல்லது வெடிவிபத்திலா மூழ்கடிக்கப்பட்டது என்பது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசுக்கும் பெரும் புதிராக இருந்து வருகிறது.

இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் குறித்து முற்றிலும் முரண்பாடான இரண்டு கருத்துக்கள் வெளியிடப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் புலிகளின் கப்பல் தாக்கப்படவில்லை எனவும் எச்சரிக்கை உத்தரவை மீறி முன்னேறிச்சென்ற கப்பல் வெடித்துச் சிதறியது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே, ஜனாதிபதி செயலகம் இச்சம்பவம் குறித்து விடுத்த அறிக்கையில், புலிகளின் கப்பலிலிருக்கும் பொருள்களை சோதனையிட அனுமதி கோரியபோது, புலிகளின் கப்பலிலிருந்து பதில் கிடைக்காததால் கடற்படை தாக்குதல் நடத்தி அதனை மூழ்கடித்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு அதிகாரி படை நிலைகளை பார்வையிட்டார்

கரவெட்டி,ஜூன்18

வடமராட்சியில் படையினர் புதிதாக அமைத்துள்ள காவலரண்களை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரி பென்ஜிற் பினைகொன் நேற்றுப் பிற்பகல் பார்வையிட்டார்.

வடமராட்சியில் புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்படுவாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருந்தார்.

அதையடுத்து கண்காணிப்புக் குழு அதிகாரி நேரடியாகச் சென்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் நடமாடும் சுதந்திரத்தை படையினர் கட்டுப்படுத்த முனைகின்றனர்

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.மாவட்டத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள போராளிகளின் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் கண்ட இடங்களில் படையினர் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவருக்கும் அரசியல்துறை யாழ்.மாவட்ட அலவலகத்தினருக்கும் இடையில் நேற்று புலிகளின் அலுவலகத்தில் நடந்த சந்திப்பின் போது இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் நிசாந்தன், சுதாஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகள் முன்வைத்த விடயங்கள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை சோதனையிடுவதாயின வழமை போன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரே சோதனைசெய்யலாம். இராணுவத்தினர் சோதனை செய்வதை அனுமதிக்க மாட்டோம்.

★ பொதுமக்கள் மீது ஆத்திரத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## போரை ஆரம்பிக்குமாறு புலிகளுக்கு வற்புறுத்தல்

### வன்னி பொது அமைப்புக்கள் மகஜர்

கிளிநொச்சி,ஜூன்18

அரசுக்கெதிரான போரை மீண்டும் ஆரம்பிக்குமாறு வன்னியிலுள்ள பொது அமைப்புக்கள், புலிகளை வலியுறுத்தி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் என்பன, விட்டுக் கொடுப்பைக் கைவிட்டு போராட்டத்தை தொடக்குமாறு கோரிக்கை விடுத்து இருக்கின்றன. நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்துக்குச் சென்ற இந்த இரண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்கிரிய பீடாதிபதி யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு,ஜூன்18

அஸ்கிரிய பீடத்தின் பிரதமகுரு வண.உடுகம சிறீ புத்தறக்கிந்த மகா நாயககர் எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

உலக ஒருமைப்பாடு அமைப்பின

(14ஆம் பக்கம் பார்க்க)

தேசிய சேமிப்பு வங்கி வழங்கும் வீடமைப்புக் கடன்

- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வயது 65 ஆகும்.
- கடன் தொகைக்கான உச்சவரம்பு எதுவுமில்லை.
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும் "துரித சேவை" வசதி

எனது வீடு கட்டும் கனவு நனவாகியது

NSB உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

மேலதிக தகவல்கள் 075-332439 அல்லது அண்மையிலுள்ள கிளை முகாமையாளரிடம் பெறலாம்.

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்குள்ளேயே பிரச்சினையை தீர்க்கக் கோருகிறது அமெரிக்கா!

## புற சக்திகளின் தலையீடு குறித்துப் புலிகள் குற்றம் சுமத்தியதும் நழுவப் பார்க்கின்றதா?

வாஷிங்ரன்,ஜுன்18

"இலங்கையர்கள் தங்கள் பிரச்சினையைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. அவர்கள் அப்படிச் செய்வார்களேயானால்; அது உலகுக்கே முக்கியத்துவமான சாதனையாக இருக்கும்."

- இப்படி கூறியிருக்கின்றார். அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ்.

நேற்றுமுன்தினம் வெளியான அவரது செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசு, இந்தப் பிராந்தியத்துடன் தொடர்புபடாத புறசக்திகளை முறையற்ற விதத்தில் இப்பிரச்சினைக்குள் இழுத்து வருகின்றது என்ற சாரப்பட தமது பிந்திய அறிக்கை ஒன்றில் புலிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அந்தப் பின்னணியிலேயே இலங்கையர்கள் தமக்குள் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற சாரப்பட - அந்தப் பிரச்சினையில் அமெரிக்கா நேரடியாகச் சம்பந்தப்படாது என்பதனைப் புலப்படுத்தும் விதத்தில் - ஆர்மிடேஜ் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"இந்தப் பிராந்தியத்தைச் சாராத சக்திகளை (Extra Territorial - Forces) முறையற்ற விதத்தில் - முறையற்ற செல்வாக்குடன் - இனப் பிரச்சினைக்குள் தலையிட இடமளித்து, சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி வருகிறது இலங்கை அரசு"- என்று கடந்த வாரம் தாம் வெளியிட்ட அறிகையில் புலிகளின் தலைமைப்பீடம் கூறியிருந்தது.

புலிகள் அவ்வாறு குறிப்பிட்ட புற சக்திகளில் அமெரிக்காவுக்கு முக்கிய இடமுண்டு என்று கருதப்படும் நிலையிலேயே ஆர்மிடேஜ் இவ்வாறு தனது அரசின் சார்பில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

டோக்கியோ ஒலிபரப்பு சேவைக்கு அளித்த அந்தப் பேட்டியில் ஆர்மிடேஜ் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் தமது அரசியல் ஆயுதமாக வன்செயலைப் பயன்படுத்துவதைக் கைவிடச் செய்யும் அழுத்தமாக, புலிகளை அமெரிக்கா தொடர்ந்து வேட்டையாடும்.

நாங்கள் புலிகளை வெளிநாட்டுப பயங்கரவாத இயக்கமாக அறிவித்துள்ளோம். நாம் அவர்களை வேட்டையாடுவோம். அவர்களுக்கு நிதி கிடைப்பதைத் தடுக்க முயற்சிப்போம்.



இனிமேலும் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாக செயற்படமுடியாத சூழலில் அவர்கள் பணிபுரிவதனையே நாம் விரும்புகின்றோம்.

வன்முறையை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதை ஒரேயடியாகக் கைவிடுவதன் மூலம் அவர்கள் அந்த நிலைக்குப் போகலாம்.

இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கான வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தத் தவறுவோர் சரித்திரத்தின் மிக மோசமானவர்களாகக் கணிக்கப்படுவார்கள் - என்றார் ஆர்மிடேஜ்.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு அதிக செல்வாக்கு இருப்பது குறித்துச் சுட்டிக்காட்டியபோது, பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து ரணிலின் அரசு புதுடில்லிக்கு தெளிவாகத் தெரியப்படுத்தி வருகின்றது என்றார் ஆர்மிடேஜ்.

"அதுதான் சரியான வழி" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு நாலரை பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை சர்வதேச சமூகம் வழங்க முன்வந்திருப்பதை "ஏற்பாட்டாளர்களின் பரந்த எதிர்பார்ப்பை விஞ்சியது அது" என்று விமர்சித்தார் ஆர்மிடேஜ்.

இலங்கையின் இனப்பிரச்சினையை அடுத்து இலங்கைக்கான உதவியை நிறுத்த யோசித்து வந்த அமெரிக்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்து சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க முன்வந்ததையடுத்து, தனது நிலைப் பாட்டை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்து கொண்டது என்றார் அவர்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டால் அது உலகுக்கு மிகப் பெரிய சமிக்ஞை. ஆனால் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவது என்பது மிகக் கஷ்டமான பணியாகும் என்றும் அவர் சொன்னார்.

"சிங்களவர்கள், தமிழர்கள் என்பதற்கு அப்பால் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், இந்துக்கள் என்றும் உள்ளனர். அதனால்தான் இலங்கையர்கள் தமக்குள் உள்ள வேறுபாடுகளைத் தாங்களே தீர்த்துக் கொண்டால் அது உலகின் மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்று நான் கூறுகின்றேன்.

"இலங்கை விவகாரம் வெற்றியாக முடியும் என்று கூறிக்கொண்டுதான் உதவும் நாடுகள் இந்தப் பங்களிப்பை தர முன்வந்துள்ளன. அத்தோடு சமாதானத்துக்கான வாய்ப்பை இம்முறை சாதகமாகப் பயன்படுத்தத் தவறுவோரைச் சரித்திரம் மிக மோசமாக மதிப்பிடும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்"- எனத் தெரிவித்தார் ஆர்மிடேஜ். (ஐ)

# மேல் கொத்மலை திட்டத்துக்கு எதிராக இ.தொ.கா. 23ஆம் திகதி போராட்டம்

கொழும்பு,ஜுன்18

மேல்கொத்மலை திட்டத்தை முன்னெடுக்க முயற்சிப்போருக்கு எதிராக, முதறகட்டப் போராட்டம் மேற்கொள்ள இருப்பதாக வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும், இதொ.கா.தலைவரும், பொதுச் செயலாளருமான ஆறுமுகம தொண்டமான் அறிவித்துள்ளார். இப்போராட்டம் எதிர் வரும் 23 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் நடைபெறும்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

மேல்கொத்மலை திட்டத்தை ஆரம்பித்தால் நுவரெலியா பிரதேச மக்களுக்கு ஏற்படவிருக்கும் இயற்கை அழிவுகளையும், பாதிப்புக்களையும் நாம் மட்டுமல்ல, அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்க தேரர்களும் தெளிவுபடுத்திக் கூறியுள்ளனர். பிரதமர் இத்திட்டத்தை அமுல்படுத்தமாட்டோம் என்று உறுதிமொழி அளித்திருக்கும் நிலையில் இத்திட்டம் மறைமுகமாக ஆரம்பிக்கப்படுவதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை முன்னெடுத்துச் செல்ல எத்தனிக்கும் அமைச்சே இதனால் ஏற்படவிருக்கும் விளைவுகளுக்கும் பொறுப்பாகும்.

ஒரு நாள் வேலைநிறுத்தத்துடன் கூடிய மறியல் போராட்டம் ஆரம்பமே தவிர முடிவல்ல. மலையக மக்களின் நலன் கருதி சேவை புரிய எண்ணுபவர்களும் இப்போராட்டத்தில் இணைந்து எதிர்ப்பினை அரசிற்கு காட்டுமாறு வேண்டுகின்றேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

### தவறவிட்ட கைச்சங்கிலி

யாழ்ப்பாணம்,ஜுன்18

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் வலிகாமம் கல்வி வலய அலுவலக வாசலில் கைச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலய அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-3)

# திருமலை கண்காணிப்பு அலுவலகத்திற்கு திங்கள் முதல் பொலீஸாரின் காவல்

## வீதிகளில் இரவு, பகலாக படையினர் பாதுகாப்பு

திருகோணமலை,ஜுன்18

திருகோணமலை, உட்துறைமுக வீதியில் உள்ள இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முதல் பொலீஸார் காவலுக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றனர். நேற்று இரு பொலீஸார் துப்பாக்கிகள் சகிதம் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த 20 நாள்களாக மர்மான முறையில் நடைபெற்றுவரும் துப்பாக கிச்சூடு, கிரனேட் தாக்குதல் ஆகியவற்றை அடுத்து இப்பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? அல்லது முல்லைத்தீவு கடல் சம்பவத்தை அடுத்து மீண்டும் யுத்தம் மூளலாம் என்ற அச்சத்தில் செய்யப்பட்டுள்ளதா? என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இதற்கிடையே, திருமலையில் சகல வீதிகளிலும் இரவு பகலாக பொலீஸாரும், படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு, பயணிகள், பாதசாரிகள் எனப் பலரையும் சோதனைக்கும் உள்ளாக்குகின்றனர்.

அடையாள அட்டை, குடும்ப அட்டைகள் என்பனவும் சோதிக்கப்படுகின்றன. சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்படுவதும் அதிகரித்து வருகின்றது.

### சுபத்திரன் கொலைச் சம்பவம்:

# கல்லூரி காவலாளிகளை விடுவிக்கக் கோரி மனு!

யாழ்ப்பாணம்,ஜுன்18

ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் த.சுபத்திரனின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் வேம்படி மகளிர கல்லூரி காவலாளிகள் இருவரையும் பிணையில் விடுமாறு கோரி மனு ஒன்று நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

கொலை தொடர்பான இந்த வழக்கில் பிணை வழங்க, இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. எனவே, மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து நிவாரணம் கோரலாம் என்று நீதிவான் அப்போது தெரிவித்தார். (ஐ-3)

# ஜே.வி.பி.பிரதிநிதிகள் இருவர் பொலீஸாரால் வெளியேற்றம்!

## அம்பாறை மாவட்ட குழுக் கூட்டத்தில் சம்பவம்

அம்பாறை கச்சேரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து ஜே.வி.பி.பிரதிநிதிகள் இருவர் வெளியேற்றப்பட்டனர்.

ஒருங்கிணைப்புக் குழுவின் மாதாந்தக் கூட்டம் அமைச்சர்கள் பி.தயாரத்ன, எம்.அதாவுல்லா ஆகியோரின் இணைத் தலைமையில் கச்சேரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்திலேயே, எம்.பிக்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் இரண்டு சாதாரண இளைஞர்களும் அமர்ந்திருந்தனர். இவர்களிடம் விளக்கம் கோரப்பட்டபோது தாம் ஜே.வி.பி.எம்.பிக்களான அனுர குமாரதிஸாநாயக்க, அஞ்சான் உம்மா ஆகியோரின் பிரதிநிதிகளாக வந்திருக்கின்றோம் என்று கூறினர்.

எனினும், அதற்கான ஆதாரங்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. அதனால், அவர்களை எம்.பி.க்களின ஆசனங்களை விட்டு எழுந்து, வேறு ஆசனங்களில் போய் அமருமாறு உத்தரவிடப்பட்டது. ஆனால், அவர்கள் எழுந்து செல்லவில்லை.

இதனால், சபையில் பெரும் கூச்சல் எழுந்தது. இந்த நிலை சுமார் அரை மணிநேரம் நீடித்தது. அவர்கள் இருவரும் தமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். வாக்குவாதம் கைகலப்பாக மாறும் நிலை ஏற்படவே, அவர்கள் இருவரையும் மண்டபத்திலிருந்து வெளியேற்றுமாறு அமைச்சர்கள் தயாரத்ன, அதாவுல்லா ஆகியோர் பொலீஸாரைப் பணித்தனர்.

தயார் நிலையில் நின்ற பொலீஸார் அவர்கள் இருவரையும் மண்டபத்திலிருந்து வெளியேற்றினர்.

"இங்கு பிரபாகரனுக்கும், புலிகளுக்கும்தான் இடம் கிடைக்குமோ" என்று அந்த இருவரும் சத்தமிட்டுக் கொண்டு வெளியே சென்றனர்.

இக்கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட எம்.பிக்களான மையோன் முஸ்தபா, சேகு இஸ்ஸதீன், சந்திரநேரு, தேவாரப் பெரும ஆகியோரும திணைக்களத் தலைவர்களும், உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# சபாநாயகரின் கூற்றை மதியாது மங்கள சமரவீர சபையில் விமர்சனம்

## எதிர்க்கட்சி கூச்சல்; சபை 45 நிமிடங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜுன்18

சபாநாயகரின் கூற்றை அகௌரவப்படுத்தும் வகையில் விமர்சித்த முன்னாள் அமைச்சரும் மாத்தறை மாவட்ட பொ.ஐ.மு. உறுப்பினருமான மங்கள சமரவீர சபையில் பகிரங்கமாக கவலை தெரிவித்துக்கொண்டார்.

நேற்றுக்காலை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சபாநாயகரின் அனுமதியுடன், நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக கவனஈர்ப்பு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துப் பேசினார். எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சு முடிந்ததும் பொ.ஐ.மு. உறுப்பினரான சந்தனகத்ரி ஆராச்சி கேள்வி ஒன்று எழுப்ப முயன்றார். ஆனால், சபாநாயகர் அதற்கு அனுமதி அளிக்க மறுத்தார். நிலையியற் கட்டளைகளின்படி கவனஈர்ப்பு அறிக்கை தொடர்பாக கேள்வி எழுப்ப முடியாது என்று சபாநாயகர் கூறினார்.

உடனே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் "கொலைகாரர்கள், துவேசிகள், அரச பயங்கரவாதிகள்" என்று கூச்சல் எழுப்பினர். அச்சந்தர்ப்பத்தில் மங்கள சமரவீர சபாநாயகரின் கூற்றை ஆவேசமாக விமர்சித்தார்.

இதனால், சபாநாயகர் சபை நடவடிக்கைகளை 15நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார். கட்சித்தலைவர்களின் கூட்டமும் நடைபெற்றது. எனினும் 45 நிமிடங்களின் பின்னரே சபை மீண்டும் கூடியது.

சபை மீண்டும் கூடியபோது, மங்கள சமரவீர பேசுகையில், "வடக்கே புலிகள் கொலை செய்கின்றனர். தெறகில் நாய்களையும் பூனைகளையும் சுடுவது போல் அரசியல்வாதிகள் கொல்லப்படுகின்றனர். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நான் வெளியிட்ட கருத்துகள் சபாநாயகருக்கும் இந்த சபைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தியிருந்தால் அதற்காக நான் கவலையடைகின்றேன்" எனத் தெரிவித்தார். (ஐ)

# பின்பற்ற வேண்டிய படிமுறைகளை மீறி ஒரு கப்பல் அழிக்கப்பட்ட வரலாறு இல்லை

## முல்லைத்தீவுக் கடல் சம்பவம் குறித்து சந்திரநேரு எம்.பி.

காரைதீவு,ஜுன்18

கடற்பரப்பில் கப்பலொன்றைத் தாக்கியழிப்பதற்கு முன்னர் பல படிமுறைகளைத் தாண்ட வேண்டும். ஆயினும், அந்த படிமுறைகளை எல்லாம் மீறி உலகில் எந்த இடத்திலும் ஒரு கப்பல் கடலில் தாக்கி அழிக்கப்பட்டதாக வரலாறு இல்லை.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, புலிகளின கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நான் 20 வருடங்கள் கடலில் கப்பலோடு வாழ்ந்தவன். கடற்சட்டங்கள் எனக்குத் தெரியும், கப்டனாக இருந்த என்னிடம் இச்சம்பவம் பற்றி யாரும் பூச்சுற்ற முடியாது.

முதலில் சுற்றிவளைப்பு, பின்பு தடுத்து வைத்தல், இலங்கையைப் பொறுத்தவரை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை அழைத்திருக்க வேண்டும்.

ஒரு சாதாரண கப்பல் அதற்குள் ஓடித்தப்பிவிட முடியாது, ஒரு கப்பல் ஒரு மணித்தியாலத்துக்கு 10-12 கடல் மைல் தூரமே செல்லும். எனவே, அப்படி தப்பிஓடவேண்டுமானால் பல மணிநேரம் பிடிக்கும்.

ஆனால், இங்கு சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் கப்பலைக் கண்டதும் தாக்கியழித்துள்ளனர் கடற்படையினர்.

இங்கு நடந்த திட்டமிட்ட தாக்குதல் சர்வதேச கடற்சட்டத்தையே மீறியுள்ளது. இலங்கைக்கு இது ஓர் அவமானம்.

உண்மையில் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இத்தனை நடந்தும் பொறுமை காப்பது தொடர்பாக -

கப்பலிலிருந்த 12 மாலுமிகள் பாதுகாப்பாக தப்ப பல வழிகள் உள்ளன. அது கூட மர்மமாகவுள்ளது. எனவே, கடற்படையினர் 12 புலி மாலுமிகளையும் ஒப்படைக்க வேண்டும்.

- இவ்வாறு கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈராக் போர் விவகாரம் பிரிட்டனில் விசாரணை

## பிரதமர் பிளயர் மீது குற்றச்சாட்டு

லண்டன்,ஜூன்18

ஈராக்கில் தாக்குதல் நடத்துவதற்காக பிரிட்டிஷ் அரசு சதாம் தொடர்பான தவறான தகவல்களை வழங்கி பிரிட்டிஷ் மக்களை தவறாக வழி நடத்தியதா? என்பது பற்றிய விசாரணைகள் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போருக்கு முன்னர், ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருந்ததாக பிரிட்டனும் அமெரிக்காவும் கூறிவந்துள்ளன. ஆனால், போரின் பின்னர் நடத்திய நீண்ட தேடுதல்களின் பின்னரும் ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருந்ததற்கான அடையாளம் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் பிரிட்டனில் பிரதமர் ரொனி பிளயருக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.



இதனை அடுத்து ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்று அரசு பிரிட்டிஷ் மக்களை தவறாக வழிநடத்தியதா? என்பது குறித்த விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கென அமைக்கப்பட்ட விசேட குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. நேற்றைய விசாரணையில் முன்னாள் அமைச்சர்களான ரொபின் குக் மற்றும் கிளேர் ஷோட் ஆகியோர் சாட்சியங்களை வழங்கினர். இவர்கள் இருவரும் ஈராக் மீதான போரை எதிர்த்து பிளயரின் அமைச்சரவையில் இருந்து இராஜினாமாச் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது போன்றதொரு விசாரணை அமெரிக்காவிலும் நடக்க இருக்கின்றது. அதற்கு முன்னதாக லண்டன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போருக்காக பிரிட்டனும் அமெரிக்காவும் சில விடயங்களைப் பெரிது படுததிவிட்டன என்று நம்பப்படும் நிலையில் இந்த விசாரணைகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஈராக்குக்கு அனுப்பப்பட்ட ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் அங்கு என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றன என்று அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயிடம் கூறியிருந்தார்கள். ஆனால், புஷ் நிர்வாகம் அவற்றைக் கருத்தில் எடுக்கவில்லை என்று அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கார்ல் லெவின் கூறியுள்ளார்.

லண்டன் விசாரணைகளின் போது, பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் மீதே கடும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஈராக்குக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் இணைந்து கொள்வதற்காக பிளயர் பொய்களைக் கூறி ஏமாற்றிவிட்டார் என்று அதிகமானவாகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

# நான்கு ஆண்டுகளுக்கு ஈராக்கில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இருக்கும்!

லண்டன்,ஜூன்18

ஈராக்கில் சதாம் ஆதரவுப் படைகளின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றால் பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கு இன்னும் நான்கு ஆண்டுகளுக்குத் தங்கியிருக்கவேண்டிவரும் என்று 'ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் தற்போது பிரிட்டன் 17ஆயிரம் தரைப்படையினரை நிறுத்தி வைத்துள்ளது. இப்போதைய நிலையில் இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கே அங்கு நிலைகொண்டிருப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், சதாம் ஆதரவுப் படைகளின் தாக்குதல்கள் தொடர்ந்தால் அவர்களை முற்றாக அகற்றும்வரை தாம் சுமார் 4 ஆண்டுகள் வரை ஈராக்கில் தங்கியிருக்கவேண்டிவரும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் 'ரைம்ஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர்.

சதாம் உயிருடன் பிடிக்கப்படும் வரை அல்லது இறந்துவிட்டார் என்பது சரியாக உறுதிப்படுத்தப்படும் வரை கூட்டுப் படையினர் ஈராக்கில் தங்கியிருக்க வேண்டிவரும் என்று அங்குள்ள பிரிட்டிஷ் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பற்றிக் கோர்டிஜெலி தெரிவித்துள்ளார்.

பொஸ்னியாவில் போர் முடிந்து 11 ஆண்டுகள் சென்றபோதும் அங்கு இன்னும் 1,500 பிரிட்டிஷ் படையினர் தொடர்ந்து தங்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதேபோன்றதொரு சூழ்நிலை இங்கும் ஏற்படலாம் என்று தாம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம)



ஈராக்கின் தென்பகுதியில் அமைந்துள்ள இரண்டாவது பெரிய நகரமான பஸ்ராவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் டாங்கி.

## ஐ.நா. வலியுறுத்து

நியூயோர்க்,ஜூன்18

ஈரான் அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், ஈரானின் அணுவாயுதத் திட்டங்களைப் பார்வையிட ஐ.நாவின் அணுவாயுதப் பிரிவினரை அனுமதிக்க வேண்டும் என்று ஐ.நா. அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்ந்து உண்மை நிலையை தெளிவுபடுத்தும் என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 'பாலைவனத் தேள்' நடவடிக்கை:

# ஈராக்கியர்கள் 317 பேர் அமெ. படையால் கைது!

பக்தாத்,ஜூன்18

ஈராக்கில் கடந்த சில நாள்களாக அமெரிக்கப் படையினர் நட்த்தி வந்த 'பாலைவனத் தேள்' இராணுவ நடவடிக்கையின் போது 317 ஈராக்கியர்கள் அமெரிக்கப் படைகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் முற்றாக வந்த பின்னரும் அங்கு சதாம் ஆதரவுப் படையினர் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தி கட்டுப்பாடற்று விதைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களைக் களையும் நோக்கத்துடன் அமெரிக்கப் படையினர் இந்த 'பாலைவனத் தேள்' நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

சதாமின் பலமான ஆதரவு நிலை எனக் கருதப்படும் திக்றிட் மற்றும் கிாகுக் ஆகிய பகுதிகளிலேயே தேடுதல்கள் அதிகம் இடம்பெற்றன. இங்கு 36 இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டதாகவும் அதில் 215 ஈராக்கியர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவத்தின் சார்ஜன்ட் ஒருவர் தெரிவித்தார். பக்தாத்தில் 11 இடங்களில் முற்றுகை நடத்திய அமெரிக்கப் படையினர் 156பேரைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தத் தேடுதல்களின் போது தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் உட்பட 18 ஆர்.பி.ஜிகள், 121 துப்பாக்கிகள், 19 பிஸ்டல்கள், 4 இயந்திரத் துப்பாக்கிகள் என்பவற்றைத் தாம் கைப்பற்றியதாகவும் அமெரிக்கப் படையினர் அறிவித்துள்ளனர்.



ஈராக்கியர் ஒருவர் அமெரிக்கத் துருப்புக்களால் கைதுசெய்யப்படும் காட்சி.

# பக்தாத்தில் சினைப்பர் தாக்கு; அமெரிக்கச் சிப்பாய் உயிரிழப்பு!

பக்தாத்,ஜூன்18

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு வடக்கே ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினர் ஒருவர் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். நெஞ்சில் வீழ்ந்த ஒரு துப்பாக்கிச் சூட்டுடன் அவர் உயிரிழந்தார். சுட்டவர் தப்பிவிட்டார்.

சதாம் ஆதரவுப் படையினரின் தாக்குதலே இது என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

ஈராக்கில் உள்ள சட்டவிரோத ஆயுதங்களைகளையும் நடவடிக்கைகளையும் அமெரிக்க எதிர்ப்பாளர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளையும் அமெரிக்கப் படைகள் ஆரம்பித்து இரு நாள்கள் சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மத்திய பக்தாத்தில் இதுவரை 400 ஈராக்கியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மக்கள் தூங்கிக் கொண்டிருந்த சமயம் வீடுகளுக்குச் சென்ற அமெரிக்கப் படையினர் தேடுதல் நடத்தினர்.

# சூகியின் கைதுக்கு ஆசியான் எதிர்ப்பு!

டோக்கியோ,ஜூன்18

மியான்மரில் இராணுவ அரசை எதிர்த்து ஜனநாயகத்துக்காகப் போராடி வரும் ஆங்ஷான் சூகி கைதுசெய்யப்பட்டுள்ளதற்கு ஆசியான் அமைப்பு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

எந்த ஒரு உள்நாட்டுப் பிரச்சினையிலும் தலையிட்டு அதனை விமர்சிக்கும் வழமை தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆசியான் அமைப்புக்கு இல்லை. எனினும், சூகி விடயத்தில் இராணுவ அரசுக்கு எதிரான தமது அதிருப்தியை ஆசியான் தலைவர்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை.

கம்போடியாவில் நடந்த ஆசியான் மாநாட்டின் முடிவில் இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டது.

சூகியை இராணுவ அரசு நடத்தி வரும் முறையை ஏற்கனவே சர்வதேச சமூகமும் தனது கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றது.

## கத்தோலிக்க ஆயர் கைது!

வாஷிங்ரன்,ஜூன்18

அமெரிக்காவில் பாலியல் குற்றச்சாட்டுக்கு இலக்கான கத்தோலிக்க ஆயர் ஒருவர் வீதியில் தனது காரினால் ஒருவரை மோதி விட்டுத் தப்பியதாக மீண்டும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதான நபர் ஒருவர் வீதியைக் கடக்க எத்தனிக்கையில் மத குருவின் கார் அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச்சென்றுவிட்டதாகவும்-

அவரது காரைத் தொடர்ந்து வந்த மற்றொரு காரும் அந்த நபரை இரண்டாவது தடவையாக மோதியதில் அவர் இறந்ததாகவும் -

சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

# 150 ஈரானியர்கள் பாரிஸில் கைது!

பாரிஸ்,ஜூன்18

ஈரானிய அடிப்படைவாத முஸ்லிம் அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் 150இற்கும் அதிகமானவர்களை நேற்றுப் பாரிஸ் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். இவர்களில் ஈரானில் ஜனநாயகம் மலர்ந்தால் அங்கு பிரதமராக வரக்கூடியவர் என்று கருதப்படும் பெண் ஒருவரும் அடங்குவார்.

தீவிரவாதத்துக்கு எதிரான பொலீஸாரே இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் 1,200 பொலீஸார் வரையில் இந்தத் திடீர்த் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தக் குழுவினர் பாரிஸில் தங்கி இருந்து ஈரானிய அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இந்தக் குழுவினரின் தலைவரின் மனைவியும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவார். மரியம் ரட்ஜவி என்ற அந்தப் பெண்ணே ஜனநாயக ஈரானில் அதிபராக வரக்கூடியவர் என்று மேற்குலக ஆதரவாளர்களால் கருதப்படுகின்றார்.

இந்தக் கைது மூலம் பிரான்ஸ் அரசு "ஈரானிய அடிப்படைவாத அரசுடன் இணைந்து செயற்பட முனைந்து வருவதாக" கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடந்த பல வருடங்களாகவே பிரான்ஸில் வசித்து வருகின்றார்கள். ஆனால், அவர்களால் நாட்டுக்கு எந்தவித இடைஞ்சல்களும் இதுவரை ஏற்பட்டதில்லை. எனினும், காரணம் எதுவும் கூறப்படாமலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய நாடுகளில் உள்ள தமது எதிர்ப்பாளர்களுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஈரானிய அரசு கேட்டுக்கொண்டதன் பேரிலேயே பிரான்ஸ் இந்தத் திடீர் நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைதானவர்களால் தெரிவிக்கப்பட்டது.



கைதுசெய்யப்பட்ட ஈரானியர்கள் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்படும் காட்சி.

# வெள்ளைநிற இரத்தத்துடன் இந்தியாவில் அதிசயக் குழந்தை!

மங்களூர்,ஜூன்18

இந்தியாவில் கர்நாடகா மாநிலம் மங்களூர் அருகே வெள்ளைநிற இரத்தத்துடன் குழந்தை பிறந்துள்ளது.

கல்லியா பகுதியில் ஒரு மருத்துவமனையில் இக்குழந்தை 6 மாதங்களுக்கு முன்பு பிறந்தது.

வெள்ளைநிற இரத்தத்துடன் குழந்தைகள் பிறப்பது அரிது. அதிக அளவு கொழுப்புச் சத்து 'டிரைகிளிசரைட்' சத்து இருப்பதால் இது போன்ற நிலை ஏற்பட்டிருக்கலாம்.

இரத்தத்தில் கொழுப்பு அளவு 200 மில்லி லீற்றர்கள் இருக்க வேண்டும். ஆனால் குழந்தையின் இரத்தத்தில் கொழுப்பு 2ஆயிரம் மில்லி லீற்றர்கள் இருந்தது. இதுபோல் ஒன்றரை லட்சம் குழந்தைகளில் ஒருவருக்கு மட்டுமே ஏற்படும்.

மரபுக் குறைபாடு காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், குழந்தையின் பெற்றோருக்கு இரத்தம் இயல்பான நிலையில் உள்ளது.

- இவ்வாறு மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லயன்ஸ் கழகத்தின் 306 - பி மாவட்டம் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கொன்றை நடத்தியது. இந்நிகழ்வில் தந்தையை இழந்த மாணவர் ஒருவருக்கான புலமைப்பரிசை அவரது தாயாரிடம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட லயன் கே.வி.முத்துகுமாரசாமி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### எமது மக்களின் இயல்பு வாழ்க்கையே தலைவரின் நோக்கம்

# அரசுக்கு பணம் தேடிக்கொடுக்க நாம் துணை போகமாட்டோம்!

## யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் உறுதி

வலி.வடக்கு,ஜூன்18

இலங்கை அரசுக்குப் பணம் தேடிக்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் துணை போகப்போவதில்லை. எமது மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டும் என்பதே தலைவரின் நோக்கம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தொடர்ந்து உரையாற்றிய இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகளைப் போன்று "அது தருகின்றோம், இது தருகின்றோம்" என்று கூறமாட்டோம். நாங்கள் இன்றும் மக்களுடைய தயவிலும் ஆதரவிலுமே இயங்கிக் கொண்டு இருக்கின்றோம்.

மக்களுடைய நல்வாழ்வுக்கும், சுதந்திரமான வாழ்க்கைக்குமாக எமது உயிர்களைத்தான் தரமுடியும். சுமார்17 ஆயிரத்து 650 மாவீரர்கள் தங்கள் உயிரைத் தந்துள்ளார்கள். இன்றும் பல ஆயிரம்பேர் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சுதந்திரமான வாழ்விற்காகவும் உயிர்களைத் தரத் தயாராக உள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுடைய பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும். இடம்பெயர்ந்தவர்களை எவரும் ஏளனப்படுத்தக்கூடாது. அதனை நாம் அனுமதிக்கமாட்டோம்.

இன்று விடுதலைப் புலிகள் அமைதியாகக் காத்திருப்பது நல்லது நடக்கவேண்டும் என்பதற்காகவே. ஆனால், அமைதி வராது போனால் நாம் மாற்று நடவடிக்கைகளிலும் ஈடுபடத்தயாராகவே இருக்கின்றோம்.

இன்று டோக்கியோ மாநாட்டின் மூலம் இலங்கைக்கு 400 கோடி ரூபா உலக நாடுகளினால் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரைப்பங்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே பெற்ற கடனுக்கு வட்டியாகக் கழிக்கப்படவுள்ளது.

மிகுதிப்பணம்தான் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது. இதிலும் ஒருபகுதி நிதி உதவி வழங்கிய நாடுகளில் இருந்து வருகின்ற உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் என்று செலவு செய்யப்படும். உங்களுக்கும் அபிவிருத்திக்கும் பயன்படப்போவது மிகவும் குறைந்தளவு நிதியே ஆகும்.

இத்தகைய ஒரு நிலைமை கூடாது என்றுதான் நாங்கள் கூறுகின்றோம்.

இன்று தென்பகுதிமக்கள் அபிவிருத்தி, தொழில்நுட்ப வளர்ச்சி பயன்பாடுகள் பற்றி சிந்திக்கின்றார்கள். ஆனால், எமது மக்கள் சொந்த இடங்களில் நாலு தடி கொண்டு கொட்டில் போட வழிபிறக்குமா என்று ஏக்கத்துடன் இருக்கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கென ஒருதொகைப்பணம் உலக நாடுகளினால் கையளிக்கப்பட்டது. ஆனால், அப்பணம் கூட இன்று வரைக்கும் எம்மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படவில்லை. இதே நேரம் இப்பணமும் கூட தென்பகுதியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலைமையே இன்று காணப்படுகின்றது.

இத்தகைய நிலைமை தொடர நாம் இடமளிக்கப்போவதில்லை. இதேநேரம் நாம் யுத்தநிறுத்தத்தையும் முறியடிக்கப்போவதில்லை. அது தொடர்ந்து கொண்டே இருக்கும். இடைக்கால நிர்வாகம் தருவதாக இருந்தால் பேச்சு மேசைக்கு செல்லமுடியும் என்றார் அவர்.

(ஒ-86)

# படையினரின் ஒப்பந்த மீறல்களை தடுக்க உடனடி நடவடிக்கை தேவை!

## பிரதமருக்கு மாவை சேனாதிராஜா கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

படையினர் மேற்கொள்ளும் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களைத் தடுக்க கடுமையான உடனடி நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா.

சமீபத்தில் சுழிபுரம் வழக்கம்பரைப் பகுதியில் படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரதமருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சுழிபுரம், வழக்கம்பரை கிராமத்தில் படையினர் பொதுமக்களைத் தாக்கி பெரும் குழப்ப நிலையை உருவாக்கினர்.

இராணுவத்தினர் தாக்குதல் நடத்திய இடத்தில் இராணுவத்தினரின் சோதனை நிலையமோ, படைமுகாமோ அல்லது பொலீஸ் நிலையமோ அமைந்திருக்கவில்லை. அவ்வாறான இடத்தினூடாக புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுப் போராளி ஒருவர் சென்றுகொண்டிருந்தார். அந்த இடத்தில் அப்போது நின்ற படையினர், உத்தியோகப்பற்றற்ற ரீதியில் போராளியை சோதனையிட முயன்றனர். இவ்வாறான சோதனை நடவடிக்கைகளை பொலீஸாரே மேற்கொள்ள முடியும் எனவும் - படையினர் சோதனையில் ஈடுபடுவது பொருத்தமற்றது எனவும் - போராளி தெரிவித்தார். அங்கு நின்ற படையினர் அதனை அலட்சியம் செய்துவிட்டு சோதனையிட முயற்சித்தனர். இதனால் அந்த இடத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அடுத்த கணம் சுமார் 300 வரையான படையினர் அங்குவந்து குவிந்து அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர். அதே வேளை - புலிப் போராளியுடன் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் அங்கு கூடினர்.

அவ்வாறு கூடிய பொதுமக்களை அவ்விடத்திலிருந்து கலைந்து செல்லுமாறு படையினர் அச்சுறுத்தினர். எனினும், பொதுமக்கள் அந்த அச்சுறுத்தலைப் புறக்கணித்தனர். அதனால் படையினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். பொதுமக்கள் மீது தாக்குதலையும் நடத்தினர். இதில் பலர் காயமடைந்தனர். குறிப்பாக கந்தசாமி இரவீந்திரன் (வயது 47) என்பவரே படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையினரின் எதேச்சதிகாரமான இத்தகைய செயற்பாடு யுத்த நிறுத்த உடன்படிக்கையை பெரிதும் மீறுவதாகின்றது.

இகுழப்ப நிலை கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையால் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது.

எனவே, படையினரின் இவ்வாறான செயற்பாடுகள் இனிமேலும் இடம்பெறாவண்ணம் தடுக்கப்படவேண்டும். இதனைத் தாங்கள் கடுமையாகக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது - இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9)

# இந்தியாவின் அன்பளிப்பாக புற்றுநோய் ஆஸ்பத்திரி

## கொழும்பில் கட்டப்படும்

கொழும்பு,ஜூன்18

கொழும்பில் புற்றுநோய் மருத்துவமனை ஒன்றை அன்பளிப்பாக இந்திய அரசு கட்டி வழங்கவுள்ளது. இந்த மருத்துவமனை முன்னர் கண்டியில் கட்டப்படவிருந்தது.

கொழும்பில் சுமார் ஏழரைக்கோடி ரூபா செலவில் இதனை அமைத்து அதற்கு இந்திய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் பெயரை இந்தியா சூட்டவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடம் டிசெம்பர் மாத நடுப்பகுதியில் கண்டி பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வின்போது, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கண்டியில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்கு தான் பெருமுயற்சி எடுத்து வருவதாகக் கூறியிருந்தார்.

எனினும், இதற்கான வேலைத் திட்டம் இந்த வருடம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

புற்றுநோய்க்கான சந்திர சிகிச்சை தற்போது கண்டி பொது வைத்தியசாலையில் நடைபெற்றுவருகிறது.

கண்டி பொது வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் அதற்கு அண்மையில் புற்றுநோயாளர்களுக்கான பிரிவு ஒன்று தற்போது புற்றுநோயாளர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### யாழ். போதனா வைத்தியசாலையில்

# சுகாதாரப் பரிசோதகர்கள் சுழற்சிமுறையில் இரத்ததானம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்படும் அபாயநிலையில் உள்ள நோயாளிகளின் நலன்கருதி இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சங்க உறுப்பினர்கள், யாழ்.கிளை வைத்தியசாலை இரத்த வங்கிக்கு சுழற்சி முறையில் இரத்ததானம் வழங்க முன்வந்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் யாழ்.கிளையினால் எடுக்கப்பட்ட இத் தீர்மானத்திற்கமைய, யாழ்.போதனா வைத்தியசாலைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.முரளீதரன் இரத்த வங்கியுடன் தொடர்புகொண்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இதில் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் மேற்படி சங்கத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் இரத்தானம் வழங்கியுள்ளனர்.

இந்த இரத்ததானம் தொகுதி தொகுதியாக தொடரும் என சங்கக் கிளையினால் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

### அரசியல் கட்சி உறுப்பினர்களின் கொலைகள்:

# தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதில் அர்த்தமில்லை என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,ஜூன்18

தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களின் படுகொலைகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது அர்த்தமற்றது.

ஈ.பி.டி.பி. நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்தி அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டுவரும் சம்பவங்களோடு புலிகளுக்கு எதுவித் தொடர்பும் இல்லை என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரான சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார். இது உண்மையானதாக இருந்தால் மகிழ்ச்சிக்கும், வரவேற்புக்கும் உரியதாகும். ஆனால், படையினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆயுதபாணிகளான புலி உறுப்பினர்கள் பலர் படையினரால் அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்கள் பல உண்டு. மண்டூர் பிரதேச சபையின் உபதலைவரான பூபாலப்பிள்ளை அழகுதுரை கொலை தொடர்பான சந்தேக நபர்களாக நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட புலி உறுப்பினர்களான இருவர் இன்னமும் நீதிமன்றில் நிறுத்தப்படவும் இல்லை. பொலீஸாரிடம் கையளிக்கப்படவும் இல்லை. இது தவிர, படையினரின் கட்டுபாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸாரால் தேடப்படும் அனைவருக்கும் பாதுகாப்பான புகலிடமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களே விளங்குகிறன என்பது பகிரங்கமான இரகசியம். வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், கொழும்பிலும் புலிகளுக்கு மாற்றான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைத் தேடிக் கொல்லவேண்டிய தேவை வேறு எவருக்கும் இல்லை. இவை இக்கொலைகளுக்கு புலிகள்தான் பொறுப்பு என்பதையே புலப்படுத்துகின்றன.

அத்துடன், அநாகரிகமான இந்த அரசியல் படுகொலைகளுக்கு மனவருத்தமும், கண்டனமும் தெரிவிக்க சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட புலிகளின் பிரமுகர்களும் பொறுப்பாளர்களும் முன்வராமலிப்பது ஏன்? இத்தகைய ஜனநாயக விரோத படுகொலைகளுக்கு எதிராக புலிகள் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? இவை அனைத்துக்கும் மேலாக புலிகளுக்கு இப்படுகொலைகளுடன் தொடர்பு எதுவும் இல்லையாயின் புலிகளுக்கு சவால்விடும் வகையில் இப் படுகொலைகளை மேற்கொள்ளும் பிறிதொரு சக்தி இருக்கிறதா? என்ற கேள்வியே மேலெழுகிறது. அது உண்மையாயின் புலிகளுக்கு சவால்விடக்கூடியவர்கள் இருக்கின்றனர் என்பதை புலிகள் ஏற்றுக்கொள்வார்களா? எனவே, அரசியல் படுகொலைகள் தொடர்பான தமிழ்ச்செல்வனின் கூற்று அர்த்தமற்றது ஆகும் - என்றுள்ளது.

### டைனமேற் வெடித்ததில் விரல்கள் துண்டிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்18

கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் அதற்குள் இருந்த டைனமற் வெடித்ததில் தனது வலது கையின் மூன்று விரல்களை இழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5மணியளவில் மந்துவில் மேற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் பிரபாகரன் (வயது20) என்ற இளைஞனே தனது கைவிரல்களை இழந்தவர் ஆவார்.

இவர் கல்லுடைத்துக் கொண்டிருந்தபோது, கற்களுக்குள் ஏற்கனவே மறைத்து வைக்கப்பட்டிருந்த டைனமற்றே வெடித்ததாகக் கூறப்பட்டது. காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-9)



பட்டயக் கணக்காளர் கலாநிதி ஆ.சோமசுந்தரம்பிள்ளை, கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி ஆகியோரின் சேவையைப் பாராட்டி புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் நடைபெற்ற வைபவத்தில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் எம்.நடராஜசுந்தரம் உரையாற்றுவதையும், அருகில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.இராஜரத்தினம், நிகழ்வுக்குத் தலைமைவகித்த கே.நடனசபாபதி, கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி, பட்டயக் கணக்காளர் ஆ.சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம் : வடமராட்சி செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# குழப்பத்தை உண்டுபண்ணும் குளறுபடித் தகவல்கள்

அமைதி முயற்சிகளுக்கு ஆப்புவைக்கும் அங்கமாக அரங்கேறியிருக்கின்றது ஆழ்கடலில் புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம்.

கப்பல் கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டதா? அல்லது கடற்படை கூறுவது போல புலிகளே தமது கப்பலை தாங்களே அழித்தார்களா? இந்தச் சம்பவம் சர்வதேசக் கடற்பரப்பில் நடந்ததா? அல்லது இலங்கை அரசின் இறைமைக்கு உட்பட்ட கடற் பிரதேசத்தில் இடம்பெற்றதா? - இவையெல்லாம் சர்ச்சைக்குரிய விடயங்களாகியுள்ளன.

இலங்கை அரசுத்தரப்பு ஒரு பக்கத்திலும் விடுதலைப் புலிகள் மறுபக்கத்திலும் எதிரும் புதிருமான தகவல்களை வெளியிடுவதால் குழப்பம்.

இவ்விடயம் குறித்து இலங்கைக் கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கை வெளிவந்தால் உண்மை தெளிவுபடுத்தப்பட வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால், இலங்கைத் தரப்பில், அதன் பக்கத்தில் உள்ள நான்கு பிரிவுகளிடையேயான தகவல்களிலேயே முரண்பாடுகளும் குளறுபடிகளும் காணப்படுவது இது விடயத்தில் இலங்கைத் தரப்பின் செயற்பாடு தொடர்பாக இயல்பாகவே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தரப்பில் அரசு, ஜனாதிபதி, கடற்படை, பாதுகாப்பு அமைச்சின் சார்பில் இராணுவப் பேச்சாளர் என நான்கு பக்கங்களில் இருந்து இவ்வவகாரம் குறித்து கருத்துக்கள், தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட கப்பலை அவதானித்த கடற்படை, அது குறித்து ஜனாதிபதியின் ஆலோசனையைக் கோரியது என்பதை ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அது குறித்து அறிவிக்க முன்னரே கப்பல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன.

சமாதான ஏற்பாடுகளின்படி, கடற்படை இத்தகைய சந்தர்ப்பங்களில் அரசியல் தலைமைத்துவத்தின் வழிகாட்டலைக் கோருவதை விட, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிப்பதே முக்கியமானதும் கட்டாயமானதுமாகும். ஆனால், அதில் முதலாவதைச் செய்த கடற்படை, சம்பவங்கள் நடந்தேறிய பின்னர்தான் கண்காணிப்புக் குழுவுக்குத் தகவல் கொடுத்திருக்கின்றது. இது கடற்படையின் நடவடிக்கைகள் குறித்து பலத்த நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

சம்பவதினம் காலை 9 மணியளவில் புலிகளின் கப்பலை கடற்படையினர் தாக்கி அழித்தனர் என்று ஜனாதிபதியின் தரப்பு அறிக்கை கூறுகின்றது.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் சார்பில் தகவல் வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன புலிகளின் கப்பலை கடற்படை தாக்கியதையோ, அதில் ஏறியதையோ, கப்பலின் சிப்பந்திகளை நோக்கித் தாக்குதல் நடத்தியதையோ அடியோடு மறுத்துள்ளார்.

அரசுத் தரப்பினரோ, புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளபோதிலும் அரசியல் சூழ்நிலை கருதி பகிரங்கமாகத் தகவல் வெளியிடுவதைத் தவிர்த்து வருகின்றார்கள்.

"கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை வெளியாகும்வரை எதுவித கருத்தும் கூறமுடியாது" - என்று தெரிவித்து சிக்கலில் சிக்காமல் தவிர்த்துக்கொண்டார் அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ்.

இந்தக் கப்பல் விடயத்தில் மட்டும் அல்ல, இது போன்ற பல சம்பவங்களில் அரசுடன் கலந்தாலோசிக்காமல், ஜனாதிபதியுடன் மட்டும் தொடர்புகொண்டு அவரின் ஏவல்படி கடற்படை நடவடிக்கை எடுக்கின்றது. அதன்மூலம் தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பக் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வரும் ஜனாதிபதிக்கு கடற்படை துணைபோகின்றது; அமைதிச் சூழல் குழம்ப - குழப்ப - வழி செய்கின்றது. - இப்படி ஒரு கருத்தும், அதனால் கடற்படை மற்றும் அதன் தலைமை குறித்து சீற்றமும் அரசுக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

இவ்வாறு இலங்கைத் தரப்புக்குள் இருந்து முரண்பாடாக வெளியாகும் தகவல்களும், பொறுப்புடன் தகவல்களை வெளியிட மறுக்கும் போக்கும் இவ் விடயத்தில் புலிகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கு மேலதிக உறுதிப்பாட்டை - நியாயத்தை - நிரூபணத்தை - தருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

### கிணறுகள் உவராவதால்

## பனிப்புலம் கிராமத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை

சண்டிலிப்பாய்,ஜூன்18

வலி.மேற்கில் உள்ள பனிப்புலம் கிராமத்திலுள்ள பெரும்பாலான கிணறுகளில் தண்ணீர் உவர் நீராக மாற்றமடைந்து வருகிறது. இதனால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இக்கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகத் திட்டம் ஒன்றை உருவாக்கி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட பல்வேறு பொது அமைப்புகள் வலிகாமம் மேற்கு பிரதேச செயலரிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இக்கிராம மக்கள் தற்போது வெகுதூரத்திலுள்ள சித்தன்கேணி பிள்ளையார் ஆலயக் கிணற்றிலும், பண்டத்தரிப்பிலுள்ள பொதுக் கிணறு ஒன்றிலும் குடிதண்ணீரை எடுத்து வந்து பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, விரைவில் இக்கிராமத்துக்கு குழாய் நீர் விநியோகத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (ஓ-135)

## நாட்டு நடப்பு

### வெஞ்சமர் மூளுமோ?

ஆகுமோ வெஞ்சமர் அமைதியும் குலையுமோ
சாகுமோ சமாதானமும் சண்டைதான் மிச்சமோ
உலகெலாம் எம்நிலை உணர்ந்து கொண்டபின்
பலமெலாம் கொண்டெமை பகைவர் அழிப்பரோ?

கூடியே கோடிகள் கொட்டிட நினைத்தவர்
நாடிவந் தெங்களின் நலன்களைக் காப்பரோ
ஓடியே அவரெலாம் ஒளிந்து நின்றபின்
கூடியே வந்தெமை கொன்று குவிப்பரோ?

நாளெலாம் பொழுதெலாம் நம்பியே இறைவனை
வாழ்வெலாம் அவனையே வழுத்திய மக்களை
ஆளலாம் அடக்கலாம் அடிமை
கொள்ளலாம்மென்பது
வாளதால் நீரதை வெட்டுமாப் போன்றதே.

- விகடகவி.

### நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு

# புகையிரத ஆணைச்சீட்டை முழுமையாக பூரணப்படுத்துக!

### கல்வி அதிகாரி அறிவுறுத்து

வலி.தெற்கு,ஜூன்18

புகையிரத இலவச ஆணைச் சீட்டுகளில்(வோரண்ட்) முழுத் தகவல்க்ளையும் கொடுக்கத் தவறுவதால் அவற்றுக்குப் பயணச்சீட்டு பெறமுடியாத நிலை ஏற்படுகிறது.

இதனைத் தவிர்ப்பதற்கு புகையிரத இலவச ஆணைச் சீட்டில் விவரங்களைச் சரியாகப் பூரணப்படுத்தவேண்டும். இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் புகையிரத இலவச ஆணைச் சீட்டினை பயன்படுத்தி பயணம் செய்வோரின் தொகை அதிகரித்துள்ளது.

அரச ஊழியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் புகையிரத இலவச ஆணைச் சீட்டைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக வவுனியாவில் இருந்து இவர்கள் கொழும்பு செல்கின்றனர்.

ஆனால், புகையிரத ஆணைச்சீட்டில் விவரங்கள் சரியாகப் பூரணப்படுத்தத் தவறுவதால், பல ஆணைச்சீட்டுக்களுக்கு பயணச் சீட்டுகள் வழங்கப்படாமல் புகையிரத நிலைய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட நேரிடுகிறது.

எனவே, இலவச புகையிரத ஆணைச்சீட்டை பூரணப்படுத்துவதில் திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் முழுக் கவனம் செலுத்தவேண்டும் என வலிகாமம் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

புகையிரத ஆணைச் சீட்டில் அதிகாரிகள் தமது பதவியுடன இறப்பர் முத்திரையை தெளிவாக இடவேண்டும். திணைக்களச் சுட்டெண் சரியாக இடப்படவேண்டும். அரைப் பயணச்சீட்டு, முழுப் பயணச்சீட்டுக்கள் வழங்குவதற்கு பயணிகளின் வயது சரியாகக் குறிப்பிடப்படவேண்டும். ஆணைச்சீட்டில் ஏதாவது மாற்றம் செய்ய நேரிட்டால், அதிகாரிகள் மாற்றத்தை உறுதிப்படுத்தி தமது ஒப்பத்துடன் பதவி முத்திரையையும் பொறிக்க வேண்டும்.

85ஆயிரத்து 440ரூபாவையோ அதற்கு மேற்பட்ட தொகையையோ வருடாந்தம் பெறும் உத்தியோகத்தர்கள் முதலாம் வகுப்புச் சீட்டுக்களையும் -

62ஆயிரத்து 340ரூபாவையோ, அதற்கு மேற்பட்ட தொகையையோ வருடாந்தம் பெறும் உத்தியோகத்தர்கள் இரண்டாம் வகுப்புச் சீட்டுக்களையும் -

ஏனைய உத்தியோகத்தர்கள் மூன்றாம் வகுப்பு சீட்டுக்களையும் பெறத் தகுதியுடையவராவர்.

எனவே, இவற்றை கவனத்திற கொண்டு புகையிரத ஆணைச் சீட்டுக்களை முறைப்படி பூரணப்படுத்துமாறு கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-152)

## தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான விதிமுறைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பாக சில விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் கல்வியாளர்களுக்கான சந்திப்பு இடம்பெற்றது.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எழிலன்பன், தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்டர், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

இச்சந்திப்பின் முடிவில் மாணவர் நலன் கருதி அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களிலும் -

காலை 6.30மணிக்கு முன்னரும், மாலை 7.00மணிக்குப் பின்னரும் வகுப்புகளை நடத்துவதில்லை என்றும் -

மாணவர்களிடம் அனுமதிக்கட்டணமாக 50ரூபாவை அறவிடுவதென்றும் - தீர்மானிக்கப்பட்டது. (ஓ)

### மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில்

## தொலைபேசி ஊடாகவும் முறைப்பாடு செய்யலாம்

### இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்18

மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை எப்போது வேண்டுமானாலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஏற்றுக்கொள்ளும்.

- இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றொகான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலீஸார் மற்றும் படையினரால் மிரட்டப்படுதல், ஆள்கள் கடத்தப்படல் உட்பட பல்வேறு மனித உரிமை மீறல்கள் அதிகரித்துவருகின்றன.

இத்தகைய மனித உரிமை மீறல் செயற்பாடுகளைத் நடுகக நாம் முடிந்தளவு நடவடிக்கை மேற்கொள்கிறோம். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக யாழ். செயலகத்துக்குச் சமீபமாக சோமசுந்தரம் வீதியில் உள்ள எமது அலுவலகத்தில் சேர்ப்பிக்கலாம். தூரம் அல்லது அச்சம் காரணமாக நேரடியாக வரமுடியாதவர்கள் எந்நேரமானாலும் 0777-164063 அல்லது 222 2021 அல்லது 222 5470 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தமது முறைப்பாடுகளைத் தரலாம் என்று இணைப்பாளர் தெரிவித்தார். (ஓ-ரி)

### நாளை

ஆனி 04
வியாழக்கிழமை
(19.06.2003)
திதி : பஞ்சமி
முற்பகல் 9.12 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 4.56 வரை.
சுபநேரம் : 7.24-8.54
இராகுகாலம் : 1.[illegible]
(வழமை நேரப்படி)

### உதய வாக்கு

இன்றைய நல்ல செயற்பாடுகளே நாளைய தினத்துக்கு உத்தரவாதமளிக்கின்றன.

### கப்பல்களின் நடமாட்டம் குறித்து

## இந்தியா இரகசியத் தகவல்களை இலங்கைக்கு வழங்குவது வழக்கமே!

### முன்னாள் தூதர் டிக்ஷிற் தெரிவிப்பு

லண்டன்,ஜூன்18

இலங்கைக் கடற்பரப்பில் நடமாடும் கப்பல்கள் மற்றும் படகுகள் குறித்த தகவல்களை இந்தியக்கடற்படை இலங்கை கடற்படைக்கு வழங்கி வருவது வழக்கமான ஒன்றுதான்.

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்ஷிற் பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் முல்லைத் தீவுக்கு அப்பால் ஆழ்கடலில் தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் கப்பல் குறித்த தகவல்களை இந்தியக் கடற்படையினரே வழங்கினர் என்று கூறப்படுவது தொடர்பாகக் கருத்து தெரிவித்த பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியக் கடற்படையும் இலங்கைக் கடற்படையும் 1992 ஆம் ஆண்டு முதலே பரஸ்பரம் ஒத்துழைத்து வருகின்றன. தாக்குதல் நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய ஒத்துழைப்புகளை இந்தியக் கடற்படை இலங்கை கடற்படைக்கு வழங்கி வருகின்றது.

கடற்பகுதியின் பொதுவான கண்காணிப்புக் குறித்தும் இலங்கையின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தகவல்களை தரும் முகமாகவும் இந்தியக் கடற்படை இலங்கை கடற்படைக்கு உதவி வருகின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரங்களில் என்ன நடந்தது என்ற உறுதியான தகவல்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் கப்பல் இலங்கை கடற்பரப்பில் அவர்களுக்கான ஆயுதங்களைக் கொண்டு வருவதாக இலங்கை கடற்படை கண்டுபிடித்ததைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றே நான் கருதுகிறேன் - என்று டிக்ஷிற் தெரிவித்தார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசு மற்றும் படைகளின் செயற்பாடுகள் புலிகளை போருக்குள் தள்ளும் சூழ்ச்சி!

## பல்கலை. மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்18

சமாதானத்துக்கான விருப்போடு போரைக் கைவிட்டுள்ள புலிகளை மீண்டும் போருக்குள் தள்ளும் சூழ்ச்சியாகவே ஸ்ரீலங்கா அரசினதும் அதன படைகளினதும் நடவடிக்கைகள் உள்ளன.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது குறித்தும் சுழிபுரம் வளக்கம்பரையில் பொதுமக்கள தாக்கப்பட்டமை குறித்தும் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுக்கு எதிரான பொறியாகவே கருதுகின்றது என்பது தெளிவாகி விட்டது. இயல்பு வாழ்வு, அரசியல் உரிமைகள் என்பவற்றில் தனக்குள்ள கடப்பாடுகளை உதாசீனம் செய்து வந்த அரசு, இப்போது ஒருபடி மேலே போய் அழித்தொழிக்கும் வேலைகளையும் தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றது.

இதனையே சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமையும் சுழிபுரத்தில் மக்கள் தாக்கப்பட்டமையும் காட்டுகின்றன.

இந்த இருசம்பவங்களும் ஸ்ரீலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்டன. சமாதானத்திற்கான காலத்தில் இதுதான் முதல் தடவை அல்ல, முன்பும் இவ்வாறான சம்பவங்கள் நடந்தன. அப்போது அதனை நியாயப்படுத்தியும் இனிமேல அவ்வாறு நடக்காது என உறுதியளித்தும் வந்தது படைத்தரப்பு. ஆனால், திரும்பவும் அவ்வாறான சம்பவங்களே நடந்தேறுகின்றன.

14ஆம் திகதி விடுதலைப் புலிகளின் எண்ணெய்க் கப்பல் சர்வதேசக் கடலில் மூழ்கடிக்கப்பட்டதுடன் மாலுமிகளான 12 விடுதலைப்புலிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதனை ஸ்ரீலங்கா கடற்படை மறுத்து வரும் நிலையில் நிலைமைகள் மோசமான கட்டத்தை அடைகின்றன; சமாதான முயற்சிகளில் முற்றுமுழுதாக நம்பிக்கையை இழக்க வைக்கின்றன.

ஸ்ரீலங்கா படைகள் வடக்கு-கிழக்கில் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. அதன் ஒரு கட்டமாக சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோவிலருகே மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அத்தோடு வீதிச் சோதனைகளையும் அடையாள அட்டைப் பரிசோதனைகளையும் கடுமையாகச் செய்து வருகின்றனர். இது ஓர் ஆபத்தான காலத்தை தமிழர்களுக்கு திரும்பவும் கொண்டு வரும் நடவடிக்கையாகும்.

சமாதானத்துக்கான விருப்போடு போரைக் கைவிட்டுள்ள புலிகளை மீண்டும் போருக்குள் தள்ளும் சூழ்ச்சியாகவே ஸ்ரீலங்கா அரசினதும், படைகளினதும் இந்த நடவடிக்கைகள் உள்ளன.

உடனடியாக இத்தகைய அச்சுறுத்தல்களை படையினர் நிறுத்தி சமாதானத்திற்கான சூழலை உறுதிப்படுத்த வேண்டும். கடலில் கைது செய்த மாலுமிகளான 12 விடுதலைப் புலிகளையும் உடன் விடுவிக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் அமைதிக்கு மிகப்பெரும் பங்கம் ஏற்பட்டு, போரில்லாத வழியில் தீர்வுகாணும் முயற்சி இப்போதைக்கு இல்லை என்றாகி விடும். - என்றுள்ளது.


### இறைபணியில் இணைந்த
### 40ஆம் வருட நிறைவு



அருட் சகோதரி

**மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை**

திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரி மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை அவர்கள் இன்று (18.06.2003) தமது அர்ப்பணவாழ்வின் 40ஆம் வருடத்தை நிறைவு செய்கிறார். இறைவன் அவர் மூலமாக கல்விச் சமூகத்திற்கும், ஏனைய பணிகளுக்கும் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறுகின்றோம். 40ஆம் வருட மாணிக்கவிழாவைக் கண்டு மகிழ்ந்தது போல் 50ஆம் வருட பொன் விழாவையும் கண்டு பூரிக்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம். இறைவன் அவருக்கு நீடிய ஆயுளையும், கூடிய சுகபலத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் மன்றாடுகின்றோம்.

தகவல்:
சகோதர சகோதரிகள்,
குடும்பத்தினர்.

42/5, மவுண்ட் கார்மேல் றோட்,
யாழ்ப்பாணம்.
(19220)



உ

### மிருசுவில்(கோட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான ஸ்ரீ வள்ளி - தெய்வநாயகி உடனுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி
### பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**அடியார்களே!**

நிகழும் சுபானு வருடம் ஆனித்திங்கள் 5ஆம் நாள் நாளை (19.06.2003) வியாழக்கிழமை பகல் 12.06முதல் 12.45 வரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் மேற்படி தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற ஸ்ரீவள்ளி - தெய்வநாயகி உடனுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக பிரதம குரு: பண்டிதர் சித்தாந்த கலாநிதி
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
(நல்லை ஆதீன சிவாசாரியார்)

தொடர்ந்து பண்டிதர் S.K.தம்பு (இளைப்பாறிய அதிபர், மிருசுவில்) அவர்களின் வரவேற்புரையும், நல்லை ஆதீன முதல்வர் 2ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியுரையும் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்ளும் கௌரவ மாண்புமிகு இந்து சமய கலாசார அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன் அவர்களின் விசேட உரையும் இடம்பெறும்.

*அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.
(19210)
இங்ஙனம்,
ஆலய தர்மகர்த்தா



உ

### மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ
### பிரதம குருவின் ஆசிச் செய்தி

வீடத்தற்பளை சம்பாவெளி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் இந்துமத பீடாதிபதியின் அருளாசியுடன் இறையருளால் சிறப்புற நிகழ்வதற்கு சம்பாவெளி விநாயகர், காசீஸ்வரர், அன்னபூர்ணா அம்பிகை திருவருள் வேண்டி பதம் பணிந்து போற்றுகிறேன்.

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவஸ்ரீ சி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் - கல்வயல்
பிரதம குரு - கல்வயல் ஐயனார் ஆலயம்,
மட்டுவில் கண்ணன் ஆலயம். (சி-28422)



### 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
10 - 01 - 1926



இறப்பு
19 - 05 - 2003

**திருமதி பொன்னம்மா சின்னத்துரை**

திதி: அபரபக்க சதுர்த்தி

எங்கள் அன்புத் தெய்வமே! பண்பின் இருப்பிடமே!!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மட்டும் மறையாது!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (18.06.2003) புதன்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழ்கின்ற மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.
(19215)
- குடும்பத்தினர்.



### விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில்
அனுபவமுள்ள
விற்பனையாளர்கள்,
பழகவிரும்புபவர்கள்
தேவை.
உடனே நேரில் வரவும்.
**த.குமாரசாமி அன் சன்ஸ்,**
248/1 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(19196)



## தரத்திற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான ஓரே நிறுவனம்




அனைத்து குளியலறை சாதனங்கள்,தளவாடங்கள்,
தரை ஓடுகள்,பைப் வகைகள்,தண்ணீர் தொட்டி வகைகள் மற்றும்
உங்களுக்குத் தேவையான சகல விதமான குளியல் அறை
பொருத்திகளையும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

**Rajabdeen & Sons Limited**

தலைமை அலுவலகம்
125, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12
தொலைபேசி:- 423623-422101
தொலைநகல்:- 449821

காட்சியறை
24,நாவல வீதி, நுகேகொடை
தொலைபேசி:- 074-411122-074-408028
192, நாவல வீதி, நாரகேன்பிட்டி
தொலைபேசி:- 807500-074-518344


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குக் கிடைத்த நிதியுதவி எதுவும் உரியமுறையில் பயன்படுத்தப்படவில்லை

**ஜப்பானில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தாம் எதிர்பார்த்ததற்கும் கூடுதலான நிதியுதவி அனுமதிக்கப்பட்டதாக அரசு கூறுகிறது. தாம் மாநாட்டில் கலந்து கொள்வதன்மூலம் வடக்கு ~ கிழக்குப் புனரமைப் புக்கெனப் பெரும் தொகை நிதியுதவியைப்பெற அரசு அக்கறை எடுத்தாலும் அவ்விதம் பெறப்படும் நிதி உரியமுறையில் வடக்கு ~ கிழக்குப் பகுதிகளுக்குச் செலவிடப்படமாட்டாதென விடுதலைப் புலிகள் அமைப்பு குற்றஞ்சாட்டியது. நீண்ட காலமாகவே இவ்வித நிதியுதவிகள் உரியமுறையில் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறுகிறார் கட்டுரையாசிரியர் உபுல்யோசப் பெர்னாந்து. 'லங்காதீப' நாளிதழில் வெளிவந்த அவரது கட்டுரையின் தமிழாக்கம் இது.**

முன்பொரு தடவை மாமா ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஸ்ரீலங்காவுக்குப் புத்துயிர் அளிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு ஜப்பானுக்குச் சென்றார். இப்போது மருமகன் ரணில் நாட்டை மலரச் செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு ஜப்பானுக்குச் சென்று திரும்பியுள்ளார். ஜப்பான் உட்பட உலக நாடுகளின் நல்லெண்ணத்தை அன்றைய தனது விஜயத்தால் மாமா ஜே.ஆரினால் தேடிக் கொள்ளமுடிந்தது. ஆனால், மருமகன் ரணிலாலோ ஜப்பான் உட்பட உலக நாடுகள் அள்ளி வழங்கிய நிதிக்கான காசோலைகளையே பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. மாமா ஜே.ஆர். தேடிக்கொண்ட நல்லெண்ணம் காரணமாகவே மருமகன் ரணிலால் ஜப்பான் உட்பட உலக நாடுகளிடமிருந்து இப்பெரும் நிதிக்கான காசோலைகளையே பெறமுடிந்ததா? என்பதைக் கூறமுடியாதுள்ளது. இருந்தபோதும், 1977இல் மாமா ஜே.ஆர்., ரொனி டீ மெல்லையும் சேர்த்துக்கொண்டு உலகத்தின் பல நாடுகளுக்கும் சென்று தேடிக்கொண்டதை, மருமகன் ரணில் சகல உலக நாடுகளையும் ஓரிடத்தில் கூடவைத்து, அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறாரென்றால் மாமாவைவிட மருமகன திறமைசாலி என்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது. ஆனால்,

## வீயெஸ்ரி

இந்தக் காசோலைகள்மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு தனித்து நின்று ரணிலால் ஸ்ரீலங்காவை மீண்டும் மலரச்செய்ய வைக்க முடியுமெனக் கூற இயலாது. அது ஐ.தே. முன்னணி மூலமே நிறைவேற்றப்பட வேண்டும்.

ஜப்பானில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கிடைத்த பல மில்லியன் ரூபா உதவித் தொகை மூலம் ஸ்ரீலங்கா நாட்டை மீண்டும் மலரச்செய்ய ஐ.தே.முன்னணி அரசு திட்டமிட்டுள்ளது. அவ்விதம் கிடைத்த நிதிமூலம் ஸ்ரீலங்காவை மலரச்செய்ய ஐ.தே.முன்னணி அரசால் முடியுமா என்பதே இப்போது நம் முன் எழுந்துள்ள வினாவாகும்.

ஸ்ரீலங்காவை மீண்டும் மலரச் செய்வது ஒன்றும் அவ்வளவு இலேசான காரியமல்ல. அது மிகுந்த சிரமம் மிக்கது. பல்வேறு பிரச்சினைகளில் சிக்குண்டு தவித்து, முடமான நிலையில் இன்று நம் நாடு ஆழ்ந்த உறக்கத்தின் வசப்பட்டுள்ளது. ஆனால், எப்படியாவது இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுத்தாக வேண்டும். அதுகூட நாம் எண்ணும் வகையில் இலேசான விடயமல்ல.

ஐ.தே.முன்னணி அரசை முதலில் மலரச்செய்தாக வேண்டியுள்ளது என்பதே உண்மையான சிக்கலாகும். நாடு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், ஐ.தே. முன்னணி அரசோ பொய்த்தூக்கம் போடுகிறது. தான் தூங்குவதாகப் பாவனை காட்டிக் கொள்கிறது. ஆழ்ந்த நித்திரையில் இருப்பவனைத் தட்டி எழுப்புவது சிரமமற்றது. ஆனால், பொய்த்தூக்கம் போடும் அரசை எவ்விதம் தட்டி எழுப்பமுடியும்? தூங்குவதாகப் பாவனை செய்யும் அரசை விழித்தெழ வைக்காமல், ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் நாட்டை விழித்தெழச் செய்து மலரவைக்கமுடியுமென்பது இயலாத காரியமாகும்.

அரசு பொய்த்தூக்கம் போடுவதாக காரணமின்றிக் குறிப்பிடவில்லை. அமைச்சொன்றின் காரியாலயம் ஒன்றுக்குள் சென்று பார்ப்போமானால் இந்த உண்மையை அனுபவரீதியாக நாம் உணர்ந்து கொள்ளமுடியும். அமைச்சரோ தன்பாடு; செயலாளர்களோ தத்தம்பாடு; அதிகாரிகள் அவரவர் பாடு; மொத்தத்தில் அமைச்சே நான்கு கோணங்களாகிச் செயற்படும் நிலையை எம்மால் அவதானிக்க முடியும்.

"அமைச்சர்கள் பொலீஸ் நிலையங்களில் பேயாட்டம் ஆடுகின்றனர்"

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கின்றனர்"

"அமைச்சர் ஒருவர் பயமுறுத்தல் விடுக்கின்றார்"

"அமைச்சர்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்கின்றனர்"

"அமைச்சரோடு அமைச்சர் மோதிக் கொண்டார்"

இன்று மேற்காட்டிய விதமான செய்திகள் பத்திரிகைகளில் தாராளமாக வெளிவருகின்றன. அந்தக் காலத்தில் அமைச்சர்கள் பொதுமக்களின் நலன்கருதி ஆற்றும் பணிகள் பற்றிய செய்திகளே பத்திரிகைகளின் முன்பக்கத்தில் இடம்பிடித்துக் கொண்டன. காலப்போக்கில் செயலளவிலின்றி, அவர்களது பொய்யான வாக்குறுதிகள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளின் முன் பக்கத்தில் இடம்பெறுமாறு அமைச்சர்கள் ஏற்பாடு செய்துவந்தனர். இன்றோ அமைச்சர்களது நாகரிகமற்ற - சட்டத்துக்குப் புறம்பான - நடவடிக்கைகள் பற்றிய செய்திகளே பத்திரிகைகளில் முக்கிய இடம்பிடித்துக் கொண்டுள்ளன.

இவ்வித தன்மை கொண்ட கூட்டத்தினரா ஸ்ரீலங்கா நாட்டை மீண்டும் மலரச்செய்யப் போகின்றனர்?

சுதந்திரத்தின் பின்னர் பதவியேற்ற டி.எஸ்.சேனநாயகா, ஸ்ரீலங்காவைக் கட்டியெழுப்பும் பணிக்காக செயலூக்கம் கொண்ட திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் திறமைக்கு முதலிடம் கொடுத்தார். 1951 முதல் 1956வரை, டட்லி சேனநாயக்காவும் சேர் ஜோன் கொத்தலாவலையும் கட்சியின் நலனுக்கு முன்னுரிமை வழங்கியே தமது நிர்வாகத்தை ஆற்றி வந்தனர். அவர்களிருவரும் திறமையைக் கருத்திற்கொள்ளாது கட்சி நலனைக் கருத்திற்கொண்டே அதிகாரிகளையும் உதவியாளர்களையும் நியமித்தனர். 1956இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தமது கூட்டு அரசைப் பேணிப் பாதுகாப்பதைக் கருத்திற்கொண்டு நியமனங்களை செய்து வந்தார். 1965இல் மீண்டும் இவ்வகைச் சந்தர்ப்பம் கிடைத்த வேளையில், டட்லி சேனநாயக்கா ஏழு கட்சிகளின் கூட்டுடன் அரசை நிர்வகிக்க வேண்டியிருந்தமையால், அக்கூட்டுக் க்கட்சிகளின் விருப்பு வெறுப்புக்கேற்பவே உயர் பதவிகளுக்கு நியமனங்கள் மேற்கொள்ளவேண்டியவரானார். 1970இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது கூட்டு முன்னணியில் அங்கம் வகித்த கட்சிகளின் விருப்பு வெறுப்புக்களையும் தமது குடும்பப் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு நியமனங்கள் மேற்கொள்ள வேண்டியவராயிருந்தார். அந்தவகையில், டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின்னர் நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு ஸ்ரீலங்காவைக் கட்டியெழுப்பும் பணியில் தகுதியான திறமைசாலிகளை நியமித்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவேயாவார். அவர் உயர் பதவி நியமனங்களில் திறமைக்கே முன்னுரிமையளித்தார். 1989இல் பிரேமதாச தான் சார்ந்த கட்சியின் நலனையும் வளர்ச்சியையும் கருத்திற்கொண்டே நியமனங்களைச் செய்தார். 1994இல் பதவிக்கு வந்த சந்திரிகா, கூட்டு முன்னணியின் பாதுகாப்பையும் கட்டுக்கோப்பையும் பேணும்வகையிலேயே உயர்பதவி நியமனங்களை வழங்கினார். அதே போன்று, 2001இல் பதவிக்கு வந்ததும் ரணில் விக்கிரமசிங்கவும், பொ.ஐ. முன்னணியை நலிவடையச் செய்து ஐ.தே.முன்னணியைப் பலப்படுத்த உதவிய குழுவினர் மூலம் ஐ.தே.முன்னணியின் இணைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் உயர் பதவி நியமனங்களை வழங்கினார்.

இவ்விதம் ஏதோவொரு பின்னணி மூலம் பதவி வகிக்கும் குழுவினரால் ஸ்ரீலங்காவை மீண்டும் மலரவைக்க இயலுமா?

இதற்கான விடையை ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே தரமுடியும். "நிர்வாகத்தை முதலில் பொறுப்பேற்கும் அரசொன்றினால் நாட்டை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியுமா? முடியாதா? என்பதனை அவ்வரசு பதவியேற்று மூன்று ஆண்டுகள் முடியும் வேளையில் தீர்மானித்துக் கொள்ளக் கூடியதாயிருக்கும்" என ஒருசமயம் ரணில் விக்கிரமசிங்க புதுமையானதொரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அவ்விதம் பதவியேற்று மூன்றாண்டு காலத்துள் பொதுமக்களுக்குத் திருப்தியான வகையில் சேவையாற்ற முடியாமல் போகும் அரசை அடுத்த தேர்தலில் பொதுமக்கள் தூக்கியெறிந்து விடுவரென்பதே அவர் சொல்லாமல் சொன்ன இரகசியமாகும்.

அந்தவகையில், அவரது ஐ.தே. முன்னணி அரசு பொதுமக்களின் திருப்தியைப் பெறுவதற்கு இன்னும் ஒன்றரை ஆண்டு காலமே மீதமாக உள்ளது. எதிர்வரும் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் ரணிலின் அரசால் உருப்படியாக, பொதுமக்களை திருப்தியுறச் செய்யும்வகையில் ஏதாவது செய்துமுடிக்க இயலுமா?

ரணிலின் தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசு ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டு, இயங்காமல் வெறுமனே காலத்தை இழுத்தடிக்க முடியாத நிலை தற்போது உருவாகியுள்ளது. ஏனெனில், பதவிக்கு வந்த நாள் முதல் "நாம் எமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய நிதி திறைசேரியில் இல்லை. திறைசேரி காலியாகவுள்ளது" என்றெல்லாம் முன்னைய அரசுமீது பழிபோட்டு வந்தது இன்றைய அரசு. இதோ, இப்போது கைநிறைந்த பணம் கைக்குக் கிட்டியுள்ளது. இவ்விதம் உதவி நிதி கிடைத்தும் உருப்படியான திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால் அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லையெனவே கருதவேண்டி ஏற்படும்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை ஒழுங்கு செய்வதற்கு முன்னர் மற்று நாடுகளிடமும் உதவி வேண்டி வேண்டுகோள் விடுக்குமாறு வேண்டப்பட்ட போதும் அரசு அதில் அதிக சிரத்தை காட்டவில்லை.


அதன் பின்னர் நோர்வேயின் 'ஒஸ்லோ' நகரில் ஸ்ரீலங்கா சமாதான முயற்சிகள் தொடர்பான சர்வதேச உதவி மாநாடு இடம்பெற்றது. அம்மாநாட்டில் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகக் குறிப்பிடத்தக்க உதவி நிதி வழங்கப்பட்ட போதிலும் இதுவரையில் அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள எதுவும் இடம்பெறவில்லை. தற்போதைய 'ஸ்ரீலங்காவை மீண்டும் மலர வைத்தல்' திட்டத்துக்கும் அதே கதிதான் ஏற்படுமோ எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. 'மீண்டும் மலரவைக்கும்' திட்டத்தை கையாள விருப்பதும் அதே குழுவாக இருக்குமாயின், அந்நடவடிக்கைகள் குறித்து கண்ணும் கருத்துமாக அவதானத்துடன் இருந்தாலும் நடவடிக்கைகள் சிறப்பாக அமையப்போவதில்லை. அப்படியானால் கிடைக்கும் நிதி என்னவாகும்?

எந்தச் சிறிய தொகையாயிருப்பினும் அதை அடையப் பெரும் முயற்சியெடுக்கும் குழுவினர் அரசில் உள்ளனர். ஆனால், அதுவொன்றும் நாம் நினைப்பது போன்று இலேசான விடயமல்ல. உண்மையில் பிரதமர் சமர்ப்பித்த வேலைத்திட்டம் சரியான வகையில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையிலேயே அம்மாநாட்டில் [illegible] தொகையை உதவி நிதியாக வழங்க முன்வந்தன. ஸ்ரீலங்காவை மீண்டும் மலரவைப்பது என்பது அவ்வேலைத்திட்டத்தை உரியவகையில் நிறைவேற்றலேயாகும்.

அப்படியாயின், இவ்வேலைத் திட்டம் எந்தவகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது? இவ்வேலைத் திட்டம் முக்கிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

1. நிறைவேற்றுத் திறனுடன் விடயத்தை அணுகுதல்.

2. நிலைமையை மதிப்பிடல் மூலம் நடவடிக்கை.



3. ஊழலற்ற, விசுவாசமும் நேர்மையும்.

இவற்றில் நிலைமைக்கேற்ற விதத்தில் திட்டமிட்டபடி நேர்மையாக இயங்கி குறிக்கோளை அடைவதற்கு முதலில் குறிப்பிடப்பட்ட திறமையும் அனுபவமும் முக்கியமாகும். இருந்தபோதும், கடைசியில் விசுவாசமும் நேர்மையும் அற்ற விதத்தில் ஊழல் நிறைந்த நடவடிக்கைகளால் பயனாளிகளாக வேண்டிய பொதுமக்கள் ஏமாற நேர்வது சகஜமானதே.

சரியான முறையில் திட்டமிட்டவாறு வேலையை நிறைவேற்ற முடியுமானால், ஒரு சிறிய அளவில் ஊழல் இடம்பெற்றாலும் தவறில்லை என்று நமது பொதுமக்கள் நினைக்க வேண்டி ஏற்படுவதற்குக் காரணம் உண்மையில் இவ்வகையான அரசுத் திட்டங்கள் சிலவேளைகளில் முற்றுமுழுதாக ஒரு சிறிய அளவிலேனும் நிறைவேற்றப்படாமையாகும். இதிலிருந்து பொதுமக்கள் சொல்லாமல் சொல்வது என்னவென்றால், "எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது விசுவாசமாக இருப்பதைவிட, வேலையை நிறைவேற்றி அதில் ஒரு பகுதி நிதியைக் கையாடுவது எவ்வளவோ மேல் என்ற விதத்தில் எண்ணத் தோன்றுகிறது" என்பதாகும்.

ஜே.ஆரின் ஆட்சிக் காலம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் வேலைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. அதேவேளை, அவற்றில் களவு வேலைகளும் இடம்பெற்றன. அந்த வேளையில், ஒரு வேலையை செய்து முடிக்கும் திறமை போன்றே மோசடி செய்வதிலும் திறமையுள்ள அமைச்சரொருவர் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த வறிய நாடொன்றின் அமைச்சரொருவரை இலங்கையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை அவருக்குக் காட்டும் நடவடிக்கையை மேற்கொள்ள நேர்ந்தது. அவற்றைக் கண்ட அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் ஆச்சரியப்பட்டார். இவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தேவைப்படும் பணம் எவ்விதம் கிடைக்கின்றதென அந்த அமைச்சர் வினாவிய போது, இத்திட்டங்கள் யாவும் வெளிநாட்டு உதவி நிதிகளைக் கொண்டே நிறைவேற்றப்படுவதாக நம் நாட்டு அமைச்சர் தெரிவித்தார். அன்று மாலை வெளிநாட்டிலிருந்து வந்திருந்த அமைச்சரை நம் நாட்டு அமைச்சர் மாளிகை போன்ற தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது, அவ்வீட்டைப்பார்த்து ஆச்சரியமடைந்த அந்த அமைச்சர் இவ்வகையான ஆடம்பர வட்டை நிர்மாணிக்க உங்களுக்கு எவ்வாறு பணம் கிடைத்ததென வினாவினார். வெளிநாடுகள் வழங்கிய உதவி நிதிகளைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு வழங்கிய ஒப்பந்தங்களின் மூலம் கிடைத்த தரகுப் பணத்தைக் கொண்டே அந்த வீட்டை நிர்மாணித்ததாக நமது நாட்டு அமைச்சர் தெரிவித்தார். அவ்விதம் செயற்படுவது நியாயமற்றதென அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் வாதிட்டதோடு, தமது நாட்டில் தாம் இவ்விதம் நடந்து கொள்வதில்லையெனவும் தெரிவித்தார். இதைக்கேட்ட நம் நாட்டு அமைச்சர் உண்மையில் அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் கூறுவது உண்மைதானா என எண்ணத் தலைப்பட்டார். அந்தச் சமயம் பார்த்து தமது நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட வருமாறு நம் நாட்டு அமைச்சருக்கு அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

அதற்கிணங்க, சில காலத்தின் பின்னர் நமதுநாட்டு அமைச்சர் அந்நாட்டுக்கு விஜயஞ்செய்ய நேர்ந்தது. எவ்விதம் நம் நாட்டு அமைச்சர் அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சரை இங்கு பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினாரோ அவ்விதமே அந்த அமைச்சர் எமது நாட்டு அமைச்சரையும் தனது நாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச்சென்று காண்பித்தார். பார்த்த இடங்கள் யாவற்றிலும் வறுமை நிலை தெட்டத் தெளிவாகத் தோற்றமளித்தது. அங்கு எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. இவற்றைக் கண்ணுற்ற நமது நாட்டு அமைச்சர் ஆச்சரியப்பட்டார். அன்று மாலை அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் நம் நாட்டு அமைச்சரைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்ற சமயம் மாளிகை போன்று தோற்றமளித்த அந்த வெளிநாட்டின் அமைச்சரது வீட்டைக்கண்டு நமது நாட்டு அமைச்சர் ஆச்சரியமடைந்தார். இதை அவதானித்த அந்த வெளிநாட்டைச் சேர்ந்த அமைச்சர் பயப்படவேண்டாம் இது உங்களைப்போன்று தரகுப் பணம் பெற்றதன்மூலம் அமைக்கப்பட்ட வீடல்ல. சட்டப்பிரகாரம் பொதுமக்களிடமிருந்து அறவிடப்பட்ட வரிப் பணத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வீடு இது எனத் தெரிவித்தாராம்.

இவ்விதமான நாடோ அல்லது இவ்விதமான போக்குக்கொண்ட அமைச்சர்களோ எமக்குத் தேவையில்லை. பொதுமக்களது வரிப் பணத்தை ஏப்பம் விட்டுக்கொண்டு 'எமது கைகள் கறைபடாதவை' எனக் கூறுவோர் எமக்குத் தேவையில்லை. வேலை செய்தால் கைகளில் கறை

(9ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்கவைக்கும் எரிபொருள் சிக்கனம்

## அறிமுகம்




**bajaj Byk**

புத்தம் புதிய bajaj Byk மோட்டார் சைக்கிள்கள் வேகம் கூடியது, சொகுசானது, நேர்த்தியானது, சிக்கனமானது.

நிர்ணய பரிசோதனை நிபந்தனைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட 92CC 4-ஸ்ரோக் மோட்டார் சைக்கிள் ஒரு லீட்டரில் 100 கிலோமீட்டர்* தூரம் ஓடக்கூடியது. திறமையான எரிபொருள் சிக்கனத்துடன் bajaj Byk உங்களை ஏனையவர்களிலும் பார்க்க முன்னணியில் திகழ வைக்கிறது.

bajaj Byk வகைகளை உங்களுக்கு வழங்குவோர் நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும் நிகரற்ற, நாடளாவிய சேவை/உதிரிப்பாக விநியோக வலைபின்னல் என்பனவற்றுக்கு அனைவரும் அறிந்த டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஆகும். DPMC எந்நேரமும் உங்கள் சேவைக்கு.

bajaj Byk ன் சில இணையற்ற அம்சங்கள்

- 1 லீட்டரில் 100 கிலோமீட்டர் ஓடக்கூடியது*
- 92CC 4-ஸ்ட்ரோக் எஞ்ஜின்
- வாயு இயக்கத்திலான ரகம்
- கவர்ச்சியான பெட்ரோல் டாங்க்
- பல வகை குவியம் கொண்ட ஒப்டோபிரிஸ்ம் பிரதிபலிக்கும் ஹெட்லயிட்
- 4 வேக கியர் பெட்டி
- நிர்ணய பரிசோதனை நியந்தனைகளுக்கு அமைவாக

சௌகரியமாக சவாரி செய்யுங்கள்

mel ads 3/6/2240

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

தன்னிகரற்ற உத்தரவாதம்

DPMC

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி: 074-700600 பெக்ஸ்: 074-700677, 687175. ஹொட்லைன்: 074-715050

பிராந்திய அலுவலகங்கள்: கண்டி, மாத்தறை, அம்பாறை, [illegible] அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைக் குழுவினருடன் தொடர்புகொள்ள அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் பின்வரும் நபர்களைத் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகம் கேட்டுள்ளது. தொடர்புகொள்ள அழைக்கப்பட்டவர்களின் பெயர், முகவரி பின்வருமாறு:

திருமதி பூரணநாதன் ஆயித்த பிள்ளை, 141,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி தர்மதுரை மங்களேஸ்வரி, பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில மேற்கு, கோண்டாவில்.

செல்லன் யோகேஸ்வரன், மாதா கோவில் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு அல்லது பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி.

மார்க்கண்டு யோகவதி, பிரதான வீதி, சுழிபுரம்.

இந்திராணி அன்ரனிப்பிள்ளை சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நடராஜா பழனிவேல், குருநாதர் கோவிலடி, தெல்லிப்பழை.

# மீள்குடியமர்வு தொடர்பாக வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஜூன்18

வவுனியா வடக்கிலுள்ள உயர் பாதுகாப்புவலயப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் வவுனியா அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அரச அதிகாரிகள், படைத்தரப்பு அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

ஓமந்தை, வேப்பங்குளம், அரசமுறிப்பு, சிதம்பரபுரம், நாம்பன்குளம் ஆகிய கிராமங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு இந்தக் கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஓமந்தை, வேப்பங்குளம் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் -

அரசமுறிப்புக்கிராமத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் மீளக்குடியமர்த்த இணக்கம் காணப்பட்டதாகவும் -

ஏனைய கிராமங்களிலும் படிப்படியாக மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் உள்ள 101ஏக்கர்கள் விவசாய நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-4-164)


யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க
பொதுக்கூட்டம் - 2003

இடம்: கல்லூரி அருணாசலம் மண்டபம்
காலம்: 06-07-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி

சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: பிரேரணைகள் 28-06-2003 வரை கல்லூரி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

- தலைவர். - செயலாளர்.



யாழ்ப்பாணம் மாவட்டக்
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
விண்ணப்பம் கோரல்

2003ஜூலை மாதத்தில் ஆரம்பமாக இருக்கும் கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர சாதாரணபிரிவுப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10 செலுத்தி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

– அதிபர்.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
51, கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.
(C/28450)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 01 - 04 - 1926



மறைவு 19 - 05 - 2003

### திருமதி இலட்சுமியம்மா கனகசபை

(முல்லைத்தீவு)

கடந்த 19.05.2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியையில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பேருதவி நல்கியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (18.06.2003) புதன்கிழமை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியனவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

க.நாகேந்திரன (மகன்)
மே/பா. அ.கதிரவேலு
(60 பாகக் கிணற்றடி)
புலோலி கிழக்கு, புலோலி.
(19233)

- குடும்பத்தினர்.

# இலங்கைக்கு கிடைத்த...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

படிந்தேயாகும். கைகளைக் கட்டிக் கொண்டு எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாது இருப்போரின் கைகள் எப்போதும் சுத்தமானவையாகவே இருக்கும். ஊழலற்ற, சிறந்த சேவையாற்றிய பல அமைச்சர்கள் ஜே.ஆரின் காலத்தில் இருந்தனர். ஆனால், அப்படிப்பட்டவர்கள் ஒருசிலர் மட்டுமே. அவர்களது செயல்கள் முறையாக கண்காணிக்கப் படாமையால் சிறுசிறு ஊழல்கள் இடம்பெற்றிருப்பினும் அவற்றைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. ஆனால், முற்றுமுழுதாக ஊழல் செய்பவர்கள் நமக்குத் தேவையில்லை.

எனவே, ஜப்பான் மாநாட்டின் மூலம் கிடைக்கும் உதவி நிதியைக் கையாள்வதற்கு செயற்றிறன்மிக்க அமைச்சர்கள் குழு அவசியமாகும். அந்த அமைச்சர்கள் குழுவின் செயலாளர்களும்,அமைச்சும் செயற்றிறன் கொண்டு விளங்குதல் அவசியமாகும். ஆனால், இன்று அவ்வகை நிலை நிலவவில்லை. அமைச்சர்கள் தமது செயலாளர்களைத் திட்டித் தீர்க்கின்றனர். செயலாளர்களோ அமைச்சர்களைத் திட்டித் தீர்க்கின்றனர். ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துகின்றனர். பொறுப்பை ஏற்பதற்கு எவரும் தயாராய் இல்லை. இந்தநிலையால் அந்த அமைச்சே செயற்றிறனற்ற பயனற்றதொன்றாய் ஆகிறது.

அமைச்சர்களின் செயற்றிறனை ஊக்குவித்து, அவர்களுக்குப் பொறுப்பான கடமைகளை வகுத்தளித்து, தவறுகள் ஏற்படும் வேளைகளில் அவற்றுக்கான விளக்கங்கள் கோரப்பட்டு, ஒருசமயம் அமைச்சர் தவறிழைத்திருப்பின் அவரைப் பதவியை விட்டு அகற்றி, நிர்வாகம் மேற்கொள்ளக்கூடிய நடைமுறை மேற்கொள்ளப்படவேண்டும் ஜே.ஆர். இவ்வகையான நிர்வாக முறையையே கடைப்பிடித்தார். அவர் அதிகாரிகள்மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அவர் தனது அமைச்சர்கள் மீதே நம்பிக்கை வைத்திருந்தார்.

பிரேமதாச இதற்கு முற்றிலும் மாறுபட்ட நடைமுறையைக் கடைப்பிடித்தார். அவர் அமைச்சர்களை நம்பிப் பொறுப்புக்களை ஒப்படைத்தாரில்லை. அவர் அமைச்சர்களை முன்னிலைப்படுத்திக்கொண்டு அமைச்சின் செயலாளர்கள் மூலமே திட்டங்களை முன்னெடுத்து நடைமுறைப் படுத்தினார். அவர் செயலாளர்கள் மீதே முழு நம்பிக்கை வைத்துச் செயற்பட்டார். அதற்காக, பொறுப்புக்களைச் செயலாளர்கள் மீது சுமத்தியதோடு, அது சரியான வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதாவென உறுதிப்படுத்திக்கொள்ள பொறுப்புமிக்க, செயலூக்கம் கொண்ட அதிகாரிகள் குழுவொன்றைப் பிரத்தியேகமாக நியமித்துப் பேணிவந்தார்.

இன்று பொறுப்புக்கள் ஒரு பாதி அமைச்சர்களிடமும், மறுபாதி அதிகாரிகளிடமும் என்றவகையில் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. இம்முறையால் தவறொன்று ஏற்படுமிடத்து அமைச்சர்களிடம் விளக்கம் கோரப்பட்டால் அவர்கள் அதிகாரிகளின் தலைமீது அக்குற்றத்தைச் சுமத்துகின்றனர். அதேவிதமாக, அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்பட்டால் அவர்கள் அத்தவறுக்கான பொறுப்பை அமைச்சர்கள்மீது சுமத்துகின்றனர். அமைச்சர்கள் தம் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றுகின்றார்ளா? அல்லது ஊழல் புரிகின்றனரா? என விசாரித்தறியக் கூடிய விதத்தில் அதிகாரங்கள் கொண்ட அரசியல் அமைப்பு எதுவும் தற்போது இல்லை. அதே வேளை, அதிகாரிகளின் கடமைகள் உரிய வகையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ள கூடிய வாய்ப்பும் இல்லை.

ஸ்ரீலங்காவை மீண்டும் மலரவைக்க அதிகாரமிக்க அரச நிர்வாக இயந்திர அமைப்பொன்று அவசியமாகும். அவ்வமைப்பு செயற்றிறன் கொண்டதாய் அமைந்திருத்தல் வேண்டும். அது சுமுகமாகவும், ஒழுங்காகவும், இயங்கக்கூடிய தன்மையுடையதாயிருத்தல் வேண்டும். ஊழல் நடவடிக்கையற்றதாயிருத்தல் வேண்டும். எவ்வளவு தான் உதவி நிதி கிடைத்த போதும் இவ்வகையிலான நிர்வாக அமைப்பொன்றினால் அந்நிதி கையாளப்படாவிடின் அந்நிதி ஓடுகின்ற நீரில் கரைத்த சர்க்கரைபோன்று பிரயோசன மற்றதாகிவிடும். சந்திரிகாவின் அரசில் இவ்வித நடவடிக்கைகளே இடம்பெற்றன. கிடைத்த உதவி நிதியை முறைப்படி கையாளக்கூடிய [illegible] இல்லை. வேலைத்திட்டங்கள் ஒழுங்காக வகுக்கப்படவில்லை. ஆதலால், தாம் முன்னர் வழங்கிய உதவி நிதி உரியவகையில் பயன்படுத்தப்படவில்லையெனக் குற்றஞ்சாட்டி உதவி வழங்கிய நாடுகள் உதவி வழங்குவதற்குப் பின்னடித்தன. இதன் காரணமாகவே "மீண்டும் ஸ்ரீலங்காவை மலரவைத்தல்" என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க வேலைத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியதாயிற்று. உதவி வழங்கும் நாடுகள் அவ்வேலைத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்தறிந்தது மாத்திரமன்றி, உதவி வழங்கும் நோக்கில் சர்வதேச மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்யவும் இணக்கம் கண்டன. ஜப்பான் அதற்குத் தலைமை தாங்க முன்வந்தது. ஜப்பான் உலகத்தின் பலம் வாய்ந்த நாடுகளிலொன்றாகும். ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நோக்கில் சர்வதேச மாநாடொன்றினை ஒழுங்கு செய்வதிலும் பார்க்க எத்தனையோ முக்கிய அலுவல்கள் ஜப்பானுக்கு உண்டு. இருப்பினும், ஜப்பான் நம்நாடு தொடர்பான நடவடிக்கைக்காக நேரம் ஒதுக்கியது. உலகத்தின் திறமை வாய்ந்த அரசியல் தலைவர்களில் சிலரில் ஒருவரான ஜப்பான் பிரதமர் இம் மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற்காக நேரம் ஒதுக்கிக் கொடுத்தா. உலகம் முழுவதிலும் ஏற்படும் பிரச்சினைகளில் பங்கு கொள்வதன்மூலம் ஒவ்வொரு வினாடியையும் பெறுமதியுடையதாகக் கருதும் உலகத்தின் அதிபலம் வாய்ந்த அமெரிக்காவும் உலகத்தின் ஒரு மூலையிலிருக்கும் சின்னஞ்சிறிய ஸ்ரீலங்கா நாட்டை மீண்டும் மலர்ச்சியுற வைக்கும் நோக்கிலான உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்குத் தன் நேரத்தை ஒதுக்கிக் கொடுக்க ஒப்புக்கொண்டது. இந்த வகையில் நோக்கும்போது அது சரித்திர முக்கியத்துவம் மிக்க மாநாடாகும். சின்னஞ்சிறு ஸ்ரீலங்காவுக்கு இவ்விதம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி முன்னெப்போதும் சரித்திரத்தில் இடம்பெறவில்லை. இம் மாநாடு மட்டுமல்ல, அதன்மூலம் நாட்டுக்கு கிடைக்கும் உதவித் தொகை கூட சரித்திர முக்கியத்துவம் கொண்டது. இது ஸ்ரீலங்காவுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கும், உலக நாடுகளுக்கும் மற்றும் உலகப் பொதுமக்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் மிக்கதொரு நிகழ்வாகும். இவ்வகையான மாநாடொன்று இதற்கு முன்னர் ஆப்கானிஸ்தானுக்கு உதவி வழங்கும் பொருட்டே இடம்பெற்றுள்ளது.

இவ்விதமான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநாடும், அதன் மூலம் கிடைத்த உதவி நிதியும் முறையான வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டுப் பயன்படுத்தப்படாவிட்டால் எதுவித பிரயோசனமுமற்றதாகிவிடும். வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் அவசியமான போதும் அதற்கான திறமை கொண்ட, அவ்வேலைத் திட்டங்களை ஒழுங்காகச் செய்து முடிக்கக்கூடிய குழுவிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். இதனை ரணில் விக்கிரமசிங்காவால் புரிந்துகொள்ள முடியாவிட்டால் அது ஸ்ரீலங்காவை மீண்டும் மலரச் செய்வதற்கான உதவி வழங்கும் நாடுகளின் மாநாடாய் அல்லாமல் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆரம்பித்த மரண உதவி நிதிச் சங்கமாகவே அமையும்.

அமெரிக்க தூதரகமூடாக சக வாழ்வு நிர்வாகம் குறித்த அமெரிக்க அனுசரணையைக் குறிப்பிட்டுக் காட்டி, ஜனாதிபதி சந்திரிகாவுக்குச் சிரமங்களை ஏற்படுத்துவது ரணிலின் நோக்கமாக இருக்கக்கூடும். ஆனால், அதற்காக அவர் தேர்ந்தெடுத்துள்ள அமெரிக்க அரசின் பிரதிநிதி புறூஸ் ஏ லோகோன் ரணிலின் வலையில் சிக்கிகொள்ளமாட்டார் என்பது மட்டும் தெளிவானதாகும். ☆


மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHO THERAPY)
யாழ்ப்பாணத்தில் 17.06.2003 முதல் 22.06.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்!

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரைக்குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்!
உடனே என்னிடம் தொடர்பு கொள்ளுங்கள்!!

ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?
மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்பு கொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N.சுற்றுலா விடுதி,
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
Govt.Regd.N0.9492
HOTLINE - 0777 - 569205
T.P.: 3181,5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(C28449)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியர்
திரு.த.சிவகுமாரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்

அவர்களின் மறைவினால் நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
கிளி/பூநகரி மகாவித்தியாலயம். ஆசிரியர்கள், மாணவர்கள்.
(19231)

## HEARTFELT SYMPATHIES



Shattered and shocked by the sudden demise of

### Rev.A.A.PAUL

The Principal Jaffna College. As a student who studied under him. I like to share the deep feelings of his family members, Collegues friends and the Alumni of Jaffna College.

C/o Dr.S.Sathasivam
Main Road,
Sithankerny.
(C/28447)

S.Ainkaran
OLD BOY OF JAFFNA COLLEGE,
TEACHER, UDUVIL GIRLS' COLLEGE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் நியமனம்பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் நேற்றைய உதயனில் வெளியாகின. முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் இன்று பிரசுரமாகின்றன.

## முல்லைத்தீவு மாவட்டம்

### *முல்லைத்தீவு கல்வி வலயம்*

எம்.சந்திரமதி (கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஏ.திரேசராணி (மன்னகண்டல் அ.த.க.பாடசாலை), எஸ்.அருட்செல்வி (உடையார்கட்டு மகாவித்தியாலயம்), எம்.உதயஸ்ரீ (குரவில் தமிழ் வித்தியாலயம்), எஸ்.கனகேஸ்வரி (தேராவில் தமிழ் வித்தியாலயம்),

ரி.எழிலரசி (தேராவில் தமிழ் வித்தியாலயம்),கே.ரஜிதா (தேராவில் தமிழ் வித்தியாலயம்), ஆர்.சரோஜினிதேவி (தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை), ரி.கருணாகரன் (அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை), பி.பத்மலதா (புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்), ரீ.ஜீவானந்த் (வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை), எஸ்.செல்வரத் தினதேவி (பாரதி வித்தியாலயம்), ஏ.செவ்வந்தி (உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலை), வை.சுகந்தமாலா (குரவில் தமிழ் வித்தியாலயம்), கே.பிரமிளா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பாடசாலை), கே.சிவாநந்தினி (அம்பலவன் பொக்கணை அ.த.க. பாடசாலை), எஸ்.இந்திரன் (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), எஸ்.சுந்தரகுமாரி (அளம்பில் றோமன் கத்தோலிக்க பாடசாலை), ரீ.ராஜினி (பாரதி வித்தியாலயம்), சி. யோகாம்பிகை (வித்தியானந்தா கல்லூரி), எஸ்.மனோரஞ்சிதம் (இருதயமடு தமிழ் வித்தியாலயம்) எஸ்.கண்ணதாஸ் (விசுவமடு மகாவித்தியாலயம்), எஸ்.தர்மினி (விசுவமடு மகாவித்தியாலயம்), பி.வசந்தி (உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலை), எம்.கவிதா (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), எம்.சகுந்தலாதேவி (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), வி.அஞ்சனாதேவி (குருணத்துக்கேணி அ.த.க.பாடசாலை), எஸ்.சித்திரலேகா (வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), எஸ்.கீர்த்தா பத்மசிறி (வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), கே.செந்தில்வேல் (குளமங்கால் அ.த.க.பாடசாலை), ஜே.அமலராணி (வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), வை.நிதி (வள்ளிபுனம் மகாவித்தியாலயம்), கே.வளர்மதி (வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), ரீ.சுபாதினி (அரசேத்திரம் வித்தியாலயம்), கே.பாக்கியவதி (குமுழமுனை மகா வித்தியாலயம்), கே.விஜிதா (குமுழமுனை மகா வித்தியாலயம்), ரி.சிவாஜினி (ஆறுமுகத்துக்குளம் அ.த.க.பாடசாலை), எஸ்.சுதர்சனா (கலைமகள் அ.த.க.பாடசாலை), கே.இந்திரகலா (உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்), எஸ்.பரமேஸ்வரன் (வித்தியானந்தா கல்லூரி),

எஸ்.ஜெயவதனா (முள்ளியவளை அ.த.க.பாடசாலை), எஸ்.அன்னலக்ஸ்மி (இருதுமண்டு தமிழ் வித்தியாலம்), வி.விக்னேஸ்வரன் (செம்மலை மகா வித்தியாலயம்), ஜி.தனேஸ்வரன் (செம்மலை மகா வித்தியாலயம்), ஏ.றொபினா (அளம்பில் மகா வித்தியாலயம்), ஏ.சுதர்சினி (கன்னப்பாடு அ.த.க.பாடசாலை), கே.மஞ்சித்தா (அரசேத்திரம் வித்தியாலயம்), பி.ஜே.எட்விசியா (இரணைப்பாலை றோ.க.), ஆர்.பாமினி (தேவிபுரம் அ.த.க.பாடசாலை), எவ்.செல்வமலர்(புதுக்குடியிருப்பு றோ.க.),

எஸ்.கமலாம்பிகை(அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை), எஸ்.பிரசன்னா (விசுவமடு மகா வித்தியாலயம்), பி.கிருஷ்ணானந்தன் (அளம்பில் றோ.க.), ரி.பாமினி (சிலாவத்துறை றோ.க.), என்.ஸ்ரீநிகாந்தன் (முள்ளியவளை றோ.க.)

ரி.சோபியாலின் (வலைஞர்மடம் அ.த.க.பாடசாலை), கே.சபாஜிதன் (கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை), என்.ஜெயவதனி (ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), ஏ.ஜீவிதராணி (அளம்பில் றோ.க.), எஸ்.செல்வநிலா (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்),

ஏ.அருளானந்தம் (பாரதி வித்தியாலயம்), எம்.எம்.ஜோசப்பின் (றோ.க.த.க.பாடசாலை), எம்.கொன்சலாறுதினி (இரணைப்பாலை றோ.க.), எஸ்.நளினி (வள்ளிபுனம் வித்தியாலயம்), கே.கருணாதேவி (இரணைப்பாலை றோ.க.), எம்.தர்சினிமாலா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ஏ.வசந்தமலர் (வித்தியானந்தா கல்லூரி), என்.தேவமணி (முள்ளியவளை றோ.க.த.க.), ரி.சுகந்தினி (விசுவமடு மகா வித்தியாலயம்), வி.சந்திரகலா (சுதந்திரபுரம் அ. த.க.பாடசாலை),

கே.றேமன் (உடையார்கட்டு மகா வித்தியாலயம், எஸ்.சிவகௌரி (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), கே.முத்துமாதவன் (தேவிபுரம் அ.த.க.பாடசாலை), பி.சாந்தரூபன் (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), எஸ்.சிவரூபி (புதுக்குடியிருப்பு றோ.க.), ஜே.ஸ்ரீதேவி (கலைமகள் வித்தியாலயம்), எம்.அனுஜா (ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்), ஏ.எம்.ஏ.கசில்டா (முள்ளிவாய்க்கால் மேற்கு வித்தியாலயம்), ரி.கிருஸ்ணலதா (உடையார் கட்டு மகா வித்தியாலயம்), ஆர்.சுஜந்தினி (இருதயமடு அ.த.க. பாடசாலை), எஸ்.சிவரங்கன் (தேவிபுரம் அ.த.க.பாடசாலை), எஸ்.சந்திரகுமாரி (கேப்பாப்புலவு அ.த.க. பாடசாலை), எஸ். குமுதினி (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

### *துணுக்காய் கல்வி வலயம்*

ரி.ஈஸ்வரரமணன் (துணுக்காய் அ.த.க.பாடசாலை), ஏ.ரஞ்சிதமலர் (உயிலங்குளம் அ.த.க.பாடசாலை), பி.பத்மரூபி (துணுக்காய் அ.த.க.பாடசாலை), கே.ஜே.சிவாகரன் (துணுக்காய் அ.த.க.பாடசாலை), வி.பவநிதி (தாண்டவன்வெளி அ.த.க.பாடசாலை), எஸ்.செல்வநாயகம் (யோகபுரம் மகா வித்தியாலயம்), கே.இராமலிங்கம் (கல்விளான் அ.த.க.பாடசாலை),

என்.வசந்தகுமாரி (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), கே.மதிவதனி (யோகபுரம் மகா வித்தியாலயம்), பி.வசந்தகுமாரி (மணியாடுவில் அ.த.க.பாடசாலை), கே.கலைச்செல்வி (துணுக்காய் அ.த.க.பாடசாலை), பி.பத்மஜோதி (முத்தையன்கட்டு அ.த.க.பாடசாலை), எஸ்.இராஜ குமாரி (முத்தையன்கட்டு அ.த.க.பாடசாலை), எஸ்.மதிவதனி (யோகபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.அம்பிகாபதி (விநாயகபுரம் அ.த.க.பாடசாலை), ரி.வினோதினி (யோகபுரம் மகா வித்தியாலயம்), வி.சிவமதி (யோகபுரம் மகா வித்தியாலயம்),

ரி.மகிழினி (யோகபுரம் மகா வித்தியாலயம்), ஈ.கிருஷாந்தா (மல்லாவி மத்திய கல்லூரி), கே.தமிழ்ப்பிரியா (யோகபுரம் மகா வித்தியாலயம்), ஏ.கலாநிதி (தென்னியங்குளம் மகா வித்தியாலயம்), ரி.கீதாம்பிகை (பண்டாரக்குளம் மகா வித்தியாலயம்),

ஏ.ஜோன்பிரகாஸ் (பாலிநகர் மகா வித்தியாலயம்), எம்.மதியலிங்கம் (ஒதியமலை அ.த.க.பாடசாலை), என்.குமுதினி (ஒதியமலை அ.த.க.பாடசாலை), எஸ்.சாந்தினி (ஐயங்கன்குளம்அ.த.க. பாடசாலை), எஸ்.சர்மினி (கல்விளான் அ.த.க.பாடசாலை),

ஆர்.உதயகுமார் (தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை), ஏ.அஜினா (மல்லாவி மத்திய கல்லூரி), ஏ.ஜெயதாம்பிகை (ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம்), எஸ்.பாமினி (ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்), ரி.மஞ்சுளா (ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்), வி.குமுதினி (ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்), கே.கனகேஸ்வரன் (ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்), கே.சுசி (மல்லாவி மத்திய கல்லூரி), என்.சத்தியவதனி (பூவரசங்குளம் அ.த.க. பாடசாலை), ஆர்.நிகான் (மல்லாவி மத்திய கல்லூரி),

பி.யசோதினி (பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்), எஸ்.பவளமலர் (தாண்டிக்குளம் மகா வித்தியாலயம்), கே.கவிதா (பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்), எம்.ஜெகநாதன் (பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்), பி.புஷ்பராணி (பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்),

பி.கோவிந்தன் (மல்லாவி மத்திய கல்லூரி), ஏ.இன்பவேணி (மல்லாவி மத்தியகல்லூரி), வி.விமலாதேவி (முத்தையன்கட்டு மகா வித்தியாலயம்), எம்.மங்களேஸ்வரி (முத்தையன்கட்டு மகா வித்தியாலயம்), கே.சுகந்தினி (மல்லாவி மத்திய கல்லூரி),

வி. மேரிஸ்ரெல்லா (மல்லாவி மத்திய கல்லூரி), பி.உதயகுமார் (ஒலுமடு மகா வித்தியாலயம்), ஏ.பி.ஜெயப்பிரியா (பாலிநகர் மகா வித்தியாலயம்), கே.குறிஞ்சி ( மல்லாவி மத்திய கலலூரி), ஜி.சுசீலா (துணுக்காய் அ.த.க. பாடசாலை),

ஆர்.ஜீவன் (ஒதியமலை அ.த.க. பாடசாலை), ரி.கஜேந்திரன் (பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலை), ரி.ஸ்ரீதனலக்ஸ்மி (முள்ளிக்குளம் மகா வித்தியாலயம்), கே.நந்தகுமார் (கல்விளான் அ.த.க.பாடசாலை), கே.உதயமலர் (பெரியபுளியங்குளம் அ.த.க.பாடசாலை),

ஆர்.ரேணுகா(பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்), கே.உருத்திரன் (அணிஞ்சியன்குளம் த.க.பாடசாலை), எஸ்.நந்தகோபால் (துணுக்காய் அ.த.க.பாடசாலை), கே.சரோஜாதேவி (மல்லாவி மத்திய கல்லூரி), எஸ்.இரத்தினகுமார் (மல்லாவி மத்திய கல்லூரி),

கே.குரூஸ் ஜெனிற்றா (அம்பலப்பெருமாள் அ.த.க.பாடசாலை), வை.சுதர்சினி (ஒதியமலை அ.த.க.பாடசாலை), பி.தேவிகா (மாங்குளம் மகா வித்தியாலயம்), எஸ்.திருக்குமரன் (புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை), எம்.கல்பனா (சம்மாளன்குளம் அ.த.க. பாடசாலை),

எம்.சுஜிதா (மன்னகண்டல் அ.த.க. பாடசாலை), பி.காந்தசீலன் (ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), கே.உதயகுமார்(பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்), எஸ்.பரிமளம் (வவுனிக்குளம் அ.த.க. பாடசாலை), பீ.லவிதா (அம்பாள்புரம் அ.த.க.பாடசாலை), என்.தணிகாசலம் (தாண்டவன்வெளி அ.த.க.பாடசாலை), எஸ்.வேஜின் (மாமடு பழம்பாசி அ.த.க.பாடசாலை), எம்.பிறேமினி (ஒதியமலை அ.த.க. பாடசாலை), ஆர்.வசந்தமலர் (அம்பகாமம் அ.த.க. பாடசாலை), எஸ்.லோகேஸ்வரி (கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பாடசாலை),

எஸ்.உமைவாணி (மல்லாவி மத்திய கல்லூரி), எஸ்.புஸ்பவதனி (பெரியபுளியங்குளம் அ.த.க.பாடசாலை), ரி.தியாகரன் (புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை), ரி.திலீபன் (வன்னிவிளான்குளம் அ.த.க.பாடசாலை, என்.நவலட்சுமி (வவுனிக்குளம் மத்தி அ.த.க.பாடசாலை), கே.கிருஸ்ணகுமாரி (அம்பாள்புரம் அ.த.க.பாடசாலை), என்.இராஜலோஜினி (துணுக்காய் அ.த.க.பாடசாலை), எஸ்.புஸ்பரஞ்சன் (ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), எஸ்.கலைநந்தினி (கொக்குளாய் அ.த.க. பாடசாலை), எஸ்.சுமித்திரா (யோகபுரம் மகா வித்தியாலயம்),

வி.விக்கினேஸ்வரன் (ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), ரி.லிங்கேஸ்வரி கல்விளான்குளம் அ.த.க. பாடசாலை), ரி.அன்னலக்ஸ்மி (ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலை), பி.கமலாசினி (தென்னியங்குளம் அ.த.க. பாடசாலை), பி.பாமினி (உயிலங்குளம் அ.த.க. பாடசாலை), எஸ்.ஜெகபிரதாபன் (புதுமுறிப்பு அ.த.க.பாடசாலை), கே.சுஜீவன் (ஒதியமலை அ.த.க. பாடசாலை), எம்.புவனேஸ் (மல்லாவி மத்திய கல்லூரி), கே.அகிலாமதி (ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை) (10)

## கலாசார உத்தியோகத்தர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பி.திலகநாயகம் கேட்டுள்ளார்.

(ஒ-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 12 - 1944



மறைவு 15 - 07 - 2002

திருமதி செல்வராசா சிவபாக்கியம்

திதி:-பஞ்சமி(18-06-2003)

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி தந்து*
*எமையெல்லாம் வாழ வைத்த அன்புத் தெய்வமே!*
*எங்களைப்பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள்*
*நினைவு தன்னைச் சுமந்து நிற்கும் எம் இதயக் கோயில் தன்னில*
*உமை வைத்து என்றும் பூசிப்பதுவே எமது கடமையாகும்.*

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (19243) -செல்வராசா குடும்பம்.

## தேவை

☆ தரம் 5 முதல் 11வரை ஆங்கிலம் மற்றும் பாடங்கள் கற்பிக்கத் தகுதியுடையவர்கள்.
☆ லிகிதர்/தொலைத் தொடர்பு சேவையாளர்.

விண்ணப்பங்களை 26.06.2003 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

நிர்வாகி,
**நியூபிறைற் கல்வி நிலையம்**
யாழ்ப்பாணம். (19236)

## மரண அறிவித்தல்

### தம்பு சுப்பிரமணியம்

**(ஓய்வு பெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்)**

இல.28, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த தம்பு சுப்பிரமணியம் 16-06-2003, திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புச் சகோதரனும் மற்றும் சந்திரேஸ்வரி (ஆசிரியை, யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), அருந்ததி, காலஞ்சென்ற அழகரஞ்சன் மற்றும் மகேந்திரன், மகேஸ்வரன், மனோகரன், மனோரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேதுராஜா(கிராம அலுவலர்), இரத்தினசபாபதி (யாழ்.பல்கலைக்கழகம்), மனோன்மணி, சிலோசனா, மாருதி, சுபகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற சிதம்பரநாதன், தங்கராசா, முத்துராசா, துரைராசா மற்றும் தனலக்சுமி, இராசமணி, பரமேஸ்வரி, சற்குணராசா (யாழ்.செயலகம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் லங்கினி, யாழினி, மயூரன், நிரூபரன், பிருந்தா, லிபிந்தா, திபேக், நிவேதா, கிஷாந்தி, சரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் -கொள்ளவும்.

தகவல்:-
க.இரத்தினசபாபதி(துரை)
(யாழ்.பல்கலைக்கழகம்)
இ.சேதுராசா
(கிராம அலுவலர் J.64)

*இல.28, பாரதி வீதி,*
*கச்சேரி நல்லூர் வீதி*
*யாழ்ப்பாணம்.* (19244)

வட்டுக்கோட்டை – வன்னியன் தோட்டம்

## அருள்மிகு சின்னக்கதிர்காமம் திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழா

18-06-2003 புதன்கிழமை

குகநேயச் செல்வர்காள்!

சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டிலே வடபால் சைவத் தமிழ் கலாசாரம் நிறைந்த வட்டுக்கோட்டை என்னும் பதியில் வள்ளி தெய்வசேனா சமேத சுப்பிரமணிய சுவாமியாகவும், கதிர்வேலாயுத சுவாமியாகவும், ஆறுமுக சுவாமியாகவும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருப்பவரும் அடியார்களுக்கு வேண்டிய வரமளித்துக் கொண்டிருப்பவருமாகிய சுப்பிரமணிய சுவாமிக்கு நிகழும் மங்கலகரமான சுபானு வருஷம் ஆனித் திங்கள் 04ஆம் நாள் இன்று (18.06.2003) புதன்கிழமை சித்தயோகமும் பஞ்சமித் திதியும் திருவோண நட்சத்திரமும் கூடிய முற்பகல் 10.09 மணிமுதல் 11.49 மணி வரையுள்ள சிம்ம லக்கின புண்ணிய சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற [illegible] அதன் முன்பின் நிகழும் கிரியைகளிலும் கலந்துகொண்டு முருகனின் கருணைக் கடாட்சத்திற்குப் பாத்திரமாகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வெ.நல்வேல்நாதன்
தலைவர், பரிபாலன சபை.

கிரியைகளைத் தலைமை தாங்கி நடத்துபவர்: பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள். (19237)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதுவும் போட்டிதான்



சர்வதேச அளவில் இளைஞர்களுக்கான சாகசப் போட்டி ஒன்றை பிரிட்டிஷ் அமைப்பு ஒன்று நடத்திவருகின்றது. இதனை 'எக்ஸ்ட்ரீம் அயர்னிங்' என்ற அமைப்பு நடத்தி வருகின்றது. போட்டி என்ன என்று நீங்கள் கேட்டால் வியந்து போவீர்கள், அத்துடன் வெள்ளையர்களுக்கு ஏன் இப்படி எல்லாம் புத்தி போகின்றது என்று சலித்தும் கொள்வீர்கள்.

போட்டி இதுதான்! ஆபத்தான - அசாதாரண - சூழ்நிலைகளில் துணிகளை இஸ்திரி செய்வதே போட்டியாகும். போட்டியாளர்கள் இத்தகைய ஆபத்தான மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளில் துணிகளை இஸ்திரி (Iron) செய்வதைப் படம்பிடித்து போட்டி நடத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். இதில் சிறந்த படத்துக்குப் பரிசு வழங்கப்படும். சிறந்த படத்துக்கான ஜோடிக்கு (இஸ்திரி செய்தவர்+ படம் பிடித்தவர்) பரிசு அளிக்கப்படுகின்றது.



இந்த ஆண்டுக்கான போட்டியில் தென்னாபிரிக்க ஜோடி வெற்றி பெற்றது. இந்த மலைக்குன்றுகளுக்கு நடுவில் கயிறு கட்டி அதில் தொங்கியபடி இஸ்திரி செய்யும் காட்சி பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பரசூட்டில் பறந்தபடி இஸ்திரி செய்யும் காட்சியைப் படம் பிடித்து அனுப்பிய ஆஸ்திரேலிய ஜோடிக்கு இரண்டாவது இடமும் பள்ளத்தாக்கில கயிற்றில் தொங்கியபடி இஸ்திரி செய்ததற்காக இங்கிலாந்து ஜோடிக்கு 3ஆவது இடமும் கிடைத்தன.

# 'யுத்தம் வேண்டாம்'




யுத்தம் வேண்டாம் என்று நாம் மட்டுமல்ல, இன்று உலகெங்கும் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் அனைவருமே விரும்புகின்றார்கள். யுத்தம் இல்லாத உலகம் அமைய வேண்டும் என்று சமாதான விரும்பிகள் அனைவரும் உரக்கக் குரல்கொடுத்து வருகின்றார்கள். பல்கேரியா நாட்டில் அண்மையில் நடந்த ஆடை அலங்காரக் கண்காட்சியில்கூட 'யுத்தம் வேண்டாம்' என்ற கோஷம் கவிதைத் தனமாய் வெளிப்படுத்தப்பட்டது. பழங்காலத்தில் மேற்குலக யுத்த வீரர்கள் அணிவது போன்ற கவச உடைகளின் பாணியில் உருவாக்கப்பட்ட உடையை அணிந்து வந்த மொடல் அழகி ஒருவர் தன்னுடன் 'நோ வோர்' என்று எழுதப்பட்ட தலைக் கவசத் தையும் கூடவே தாங்கி வந்தார்.

# அட! அப்படியா!!

## தண்ணீரிலும் படம் எடுக்க




மின்னியல் பொருள்களுக்குப் பெயர் போன ஜப்பானின் 'சொனி' நிறுவனம் புதிய டிஜிட்டல் கமரா ஒன்றை உருவாக்கியுள்ளது. வெய்யில் மழை என்று எந்தக் காலநிலையிலும் சிறப்பாகப் படம் எடுக்க வல்லது இந்தக் கமெரா. 'சைபர்ஷொட் டி.எஸ்.சி. டிஜிட்டல் கமெரா' என்று பெயரிடப்பட்டுள்ள இதனை தண்ணீருக்குள் போட்டு விட்டு வெளியே எடுத்துக்காட்டுகின்றார் 'சொனி' நிறுவனப் பெண் ஊழியர் ஒருவர்.

தண்ணீரில் போட்டாலும் பாதிக்கப்படாத வகையில் 'வோட்டர் புறூவ்' வகையில் இந்தக் கமெரா தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 2.11 மெகா பீக்ஷல் சி.சி.டி இமேஜ் சென்ஸார் உள்ளது. இது ஜப்பான் நாணய மதிப்பில் 30ஆயிரம் ஜென் விலையுள்ளது. இதுவரை விசேடமாக தண்ணீரில் படம் எடுப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட பெரிய கமெராக்களில் மட்டுமே இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போதே முதன் முறையாக சாதாரண கமெராவில் இந்தத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# 'நூடில்ஸ் பெண்'



படத்தில் நீங்கள் பார்ப்பது குளியல்த் தொட்டியில் படுத்திருந்து சோப்பு விளம்பரத்துக்கு 'போஸ்' கொடுக்கும் பெண்ணை என்று நினைத்தால், நீங்கள் மகா தவறு செய்கின்றீர்கள் என்று அர்த்தம். உண்மையில் அது ஓர் அழகான – அற்புதமான – சிற்பம். ஜேர்மனியில் அண்மையில் நடந்த ஒரு கண்காட்சியில் இந்தச் சிற்பம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. 'நூடில்ஸ் பெண்' என்று பெயரிடப்பட்டிருந்த இந்த அழகிய சிற்பத்தை ஜப்பானியக் கலைஞரான மஜிமா உருவாக்கி உள்ளார். பெரிய கிண்ணம் ஒன்றில் அமர்ந்திருந்து நூடில்ஸ் சுவைத்தபடி ஹாயாக டி.வி. பார்ப்பது போன்று அமைக்கப்பட்ட இந்தச் சிற்பம் பார்வையாளர்களின் சிந்தையைப் பெரிதும் கவர்ந்தது.

தயாரிப்பு: கனிமொழி

# செவ்வாய் சென்ற ரோவர்களுக்கு பெயரிட்ட 9 வயதுச் சிறுமி

பூமிக்கு வெளியே ஏதாவது ஒரு கிரகத்தில் உயிரினங்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கை மற்றும் அதற்கான தேடல்கள் நீண்ட காலமாகவே மனிதர்கள் மத்தியில் இருந்து வருகின்றன. அந்த நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டும் விதத்தில் செவ்வாய்க் கிரகம் குறித்து செய்மதிகள் அனுப்பிய புகைப்படங்கள் அமைந்திருந்தன.

இந்தப் புகைப்படங்கள் செவ்வாயில் தண்ணீர் இருப்பதற்கான அடையாளங்களைத் தெளிவுபடுத்தின. இது விஞ்ஞானிகள் மத்தியில் செவ்வாய் பற்றிய ஆர்வத்தை மேலும் தூண்டியது. செவ்வாயில் தண்ணீர் இருக்குமானால் அங்கு உயிரினங்களும் இருக்கலாம் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

மண்டும் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள செவ்வாய் பற்றிய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில் இதுவே முக்கிய பகுதி. அதாவது செவ்வாயில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள் எந்தளவில் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதே அவர்களின் பிரதான நோக்கம். தண்ணீரும் வளியும் இருந்தால் செவ்வாயில் உயிரினங்கள் இருக்கும் என்ற கூற்றை நிச்சயம் மறுக்கமுடியாது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

2003ஜூன் மாதம் செவ்வாய் பற்றிய ஆராய்ச்சியில் பொற்காலம் எனலாம். இந்த மாதத்தில் ஐரோப்பா ஒரு விண்கலத்தையும் அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் மற்றொரு விண்கலத்தையும் செவ்வாய்க்கு அனுப்பியுள்ளன. மேலும் ஒரு விண்கலம் விரைவில் நாஸாவால் அனுப்பப்படவுள்ளது.

நாஸாவால் அனுப்பப்பட்ட முதலாவது விண்கலம் கடந்த 8ஆம் திகதி அமெரிக்காவின் புளோரிடா விண்தளத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இதில் செவ்வாயில் தரையிறங்கி ஆய்வு செய்யும் வகையில் தானியங்கி ரோபோ (ரோவர் - Rover) ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்த விண்கலம் எதிர்வரும் 25ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இதிலும் தானியங்கி ரோபோ (ரோவர்) ஒன்று அனுப்பப்படவுள்ளது.


இந்த இரு ரோவர்களுமே செவ்வாயில் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொண்டு தகவல்களை பூமிக்கு அனுப்பப்படவுள்ளன.

**- பிரேம் -**

1997இல் நாஸா அனுப்பிய இத்தகைய 'பாத் பைண்டர்' என்ற ரோவர் வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொண்டது. ஆனால், அதன்மூலம் பெறப்பட்ட தகவல்கள் திருப்திகரமாக இல்லை என்பது விஞ்ஞானிகள் கருத்து.

தற்போது மேம்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ரோவர்கள் அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

தற்போது அனுப்பப்படும் நவீன



செவ்வாய்க்கு அனுப்பட்ட ரோவர்

ரோவர்களுக்கு 'ஸ்பிரிட்' (Spirit - உற்சாகம்) மற்றும் 'ஒப்போசூனிட்டி' (Opportunity - சந்தர்ப்பம்) என்று பெயரிடப்பட்டுள்ளது. ரோவர்களுக்குப் பெயரிடப்பட்ட இந்த விடயம் பற்றி மிகச் சுவாரஸ்யமான சம்பவம் உண்டு. நாஸா எனப்படும் உலகின் மிகப்பெரிய விண்வெளி மையத்தின் ரோவர்களுக்கு பெயரிட்டது யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

உங்கள் கற்பனைக்கு எட்டாத வகையில் இந்தக் கேள்விக்கான பதில் இருக்கும். வெறும் 9 வயது மட்டுமே நிரம்பிய ஒரு சிறுமியே இந்த ரோவர்களுக்குப் பெயரிட்டுள்ளாள் என்றால் உங்களால் நம்ப முடிகின்றதா? ஆனால், உண்மை அதுதான்.

அந்தச் சிறுமி ரோவர்களுக்குப் பெயரிட்ட முறையும் சுவாரஸ்யமானதுதான். ரோவர்களுக்குப் பெயரிடுவதற்கு 12 வயதுக்குட்பட்ட அமெரிக்க மாணவர்களிடம் நாஸா கருத்துக் கேட்டது. 10ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.


ரஷ்யாவில் பிறந்து தற்போது அமெரிக்காவில் வளரும் 9 வயதுச் சிறுமியான ஸோபி கொலிஸ் இதில் வெற்றி பெற்றால். அவள் தெரிவு செய்த 'ஸ்பிரிட் அன்ட் ஒப்போசூனிட்டி' என்ற பெயரே இரு ரோவர்களுக்கும் சூட்டப்பட்டன.

ரோவர்களுக்கு தான் ஏன் அப்படிப் பெயரிட்டேன் என்பதற்கு அவள் அற்புதமான காரணம் ஒன்றையும் எழுதி இருந்தாள். அதுதான் நாஸா அதிகாரிகளைக் கவர்ந்தது. அவள் எழுதியிருந்தது இதுதான்.

"நான் அகதி முகாமில் வாழ்ந்த ஒரு சிறுமி. அந்த முகாம் பகுதி இருட்டாகவும் குளிரானதாகவும் இருக்கும். நான் அங்கிருக்கும் போது வான்வெளியை நீண்டநேரம் அவதானிப்பது வழமை; அதற்கு நிறையவே வசதிகளும் இருந்தன. வானில் காணப்பட்ட நட்சத்திரங்கள் என் மனதில் கற்பனைகளை விதைத்தன. வானில் பறக்கவேண்டும் என்ற ஆசையையும் அது எனக்கு ஏற்படுத்தியது. எனது கனவுகளை என்றாவது ஒரு .நாள் நான் உண்மையாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கான "ஊக்கத்தையும் - Spirit" "சந்தர்ப்பத்தையும் - Opportunity" உங்கள் திட்டம் தந்ததற்கு நன்றி" - என்று அந்தச் சிறுமி எழுதி இருந்தாள. அதற்கு "ஸ்பிரிட் அன்ட் ஒப்போசூனிட்டி" என்று அவள் தலைப்பிட்டிருந்தாள்.

நாஸா அதிகாரிகளைக் கவர்ந்த அநதச் சிறுமியின் எழுத்துக்கள் செவ்வாய்க்குச் செல்லும் ரோவர்களுக்கு அவள் இட்ட பெயராக மாறின.

அனுப்பப்பட்டுள்ள ரோவர்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம். ★



ரோவர் ஒன்றுடன் ஸோபி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர் அல்சேஷன் குறோஸ நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: No.6, நந்தாவில் ஒழுங்கை (இராம கிருஷ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. நேரம்: நண்பகல் 11.00-12.00, மாலை 5.00-6.00. (18885)

1½ மாதம் நிரம்பிய நல்லின அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சு.ஜெயச்சந்திரன், பண்ணாகம், சுழிபுரம். (19229)

அவுசா அம்பிளிவயர் 400W, 80W, 60W, நீளக்கோண்கள் 24" யூனிற் - 60W, 40W, லைன் ரான்ஸ்போமர்கள், 9 சனல் மிக்ஸர்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (19067)

கே.கே.எஸ். றோட, மல்லாகத்தில காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.பத்மநாதன், மல்லாகம் சந்தி மல்லாகம். (19230)

வீட்டுப் பாவனையில் இருந்த அலுமாரி, செற்றி, கட்டில், கதிரை, குளிர்சாதனப்பெட்டி, றைஸ் குக்கர், கிறைண்டர், சோலர் மற்றும் சமையல் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.27, மவுண் கார்மேல் வீதி, யாழ்ப்பாணம். (19228)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- தாசன், 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (19226)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 140/-, சுத்தம செய்யப்பட்டது. 1Kg 220/- மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு கழிவு வழங்கப்படும். றாஜீவ் ஆனைக கோட்டைச் சந்தி
T.P.NO:- 3529, 2867 (19223)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.(Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (19227)

### தவறிவிட்டது

சோதிலிங்கம் இன்பராணி என்பவருடைய மருந்து, உடுப்பு, பிலிம்றோல அடங்கிய பை(BAG) கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் (769 இல. மினிபஸ்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விநாயகர் புடைவை அகம், 62A, 63A,நவீன சந்தை(உட்புறம்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (19235)

### வாடகைக்கு

மாநகரசபை எல்லைக்குள் சென். ஜோன்ஸ் பேராலய வீதிக்கு அண்மையில் மாடிவீடு (நிறுவனங்களிற்கு ஏற்றது) வாடகைக்குண்டு. தொடர்பு:- T.P. No. 222- 5687. (19208)

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு, ஜூன்18

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் புனரமைப்புப் பணிக்கென இவ்வாண்டு 18லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

சபை நிதி 11 லட்சம் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான நிதி 7லட்சம் ரூபாவுமே இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் உரும்பிராய் பொக்கனை வீதி, உரும்பிராய விலாத்தியடி வீதி, அச்செழு யூலன் வீதி, ஊரெழு முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் அரச வைத்தியசாலை, இருபாலையில் உள்ள மாடு வெட்டும் கொல்கலன் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளே நடைபெறவுள்ளதாகவும் பிரதேச சபையின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-180)

### புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விவகாரம்

## அரசாங்கத்தின் தகவல்களை சாட்டுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூன்18

விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று அண்மையில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சில தகவல்களை அரசாங்கம் மூடி மறைத்து விட்டது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த உண்மையான தகவல்களை வெளியிடுவதில் அரசு அசமந்தப் போக்கைக காட்டுகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். விடுதலைப் புலிகள் இந்தக் கப்பலில் ஆயுதங்களைக் கடத்தியமை கடற்படையினரால் தெளிவாக கண்டறியப்பட்டுள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சர் அதனை மூடி மறைத்து விடுதலைப் புலிகளைக் காப்பற்ற முயல்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி பொ.ஐ.முன்னணிப் பிரமுகர்களுடன் ஆலோசனையும் நடத்தியுள்ளார்.(ம-4)

## நீர்வேலி, கரந்தன் பகுதிகளில் ஆயுதக்கும்பல் நடமாட்டம்

நீர்வேலி மற்றும் கரந்தன் பகுதிகளில் கடந்த சில நாள்களாக இரவு வேளைகளில் இனந்தெரியாத நபர்கள் கத்திகள், வாள்கள் சகிதம் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வீதியோரமாக உள்ள பற்றைகள் மற்றும் மரங்களுகக்குப் பின்னால் இந்தக் கும்பல் மறைந திருப்பதாகவும்-வாகனங்கள் வரும் வேளையில் வீதிக்கு வரும் அவர்கள வாகனங்களை மறிப்பதாகவும் -கூறப படுகிறது.

கடந்த வாரத்தில் ஒருநாள் இராச வீதி வழியாக மோட்டார் சைக்கிளில வந்தவரை இந்த நபர்கள் வழிமறித்ததாகவும் - ஆனால், அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது செல்லவே கும்பல் கத்தியினால் வெட்டி மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையை சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் நடந்து செல்வோரை இக்கும்பல் வழிமறித்து விசாரணை நடத்தியுள்ளது. கடந்த மாதம் 30ஆம் திகதி கரந்தன் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டு கிணற்றில் தூக்கி வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## இரவுக் காவலர் தேவை

நெல்லியடி வர்த்தக சங்கத்தின் சார்பில் உள்ள கடைகளுக்கு இரவுக்காவலுக்கு தகுதியானவர்கள் உடன் தேவை. கரவெட்டி தெற்கு / மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். வயதெல்லை 30 தொடக்கம் 45 வரை, கல்வித் தகைமை கவனிக்கப்படும். விரும்பியவர்கள் 25-06-2003இற்கு முன் மேற்படி சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

**நெல்லியடி வாணிபர் கழகம்**
**முதன்மைச் சாலை, நெல்லியடி, கரவெட்டி.**

(சி-28451)

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



இலங்கையில் மலர்வு 05 - 12 - 1980

இந்தியாவில் உதிர்வு 20 - 06 - 2000

### செல்வன் பாலசுப்பிரமணியம் கோபிநாத்

(விஞ்ஞானப் பிரிவு மாணவன், யாழ்.இந்துக்கல்லூரி)
வேலணை - 4

திதி: சதுர்த்தி 18-06-2003

அமைதியாக, ஆனால் ஆழமான
எண்ணங்களால் எம் இதயம் கவர்ந்து
அன்பு காட்டி,
உயரிய உள்ளந்தனை உன்னகத்தே
கொண்டிருந்த நாங்கள்
உன் இன்ப நினைவுகளுடன்
உன் உடலைப் பிரிந்தும்
உயிரைப் பிரியா
அன்பு உள்ளங்கள்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

தகவல்: ஐ.பாலசுப்பிரமணியம்.
73. இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சி-28448)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி புஸ்பராணி பஸ்ரியாம்பிள்ளை

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி புஸ்பராணி பஸ்ரியாம்பிள்ளை 15-06-2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை திரேசம்மாவின் அன்பு மகளும், பஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் வினோஜன், பாலினி, சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானப்பிரகாசம், மரியதாஸ், அமலதாஸ், டாக்டர் விமலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட் சகோதரி மேரி வில்பிறட்டின் பெறாமகளும் ஆவார்.

இவரது நல்லடக்கம் 19-06-2003 வியாழக்கிழமை மாலை 4மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியுடன் புனித அன்னாள் உத்தான பூமியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

*நிரோ பேக்கரி,*
*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(19234)



உ
தில்லையம்பதியாள் துணை

## கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2003

**அம்பாள் அடியார்களே!**

**நிகழும் சுபானு வருடம் ஆனித் திங்கள் 5ஆம் நாள் (19-06-2003) வியாழக்கிழமை காலை 8.00மணி முதல் 8.40 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல் வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற தில்லையம்பதியாளின் திருவருள் கைகூடியுள்ளது.**

'தில்லையம்பதியாளே! சிவகாமசுந்தரியே சரணம்!'

தில்லையம்பதி,
கோண்டாவில்.

- திருக்கோயில்
பரிபாலன சபையினர்

(19236)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 13.10.1939
உதிர்வு: 19.05.2003

எமது சக ஆசிரிய மாணவனின் அன்புத் தாயார்

### திருமதி மகேஸ்வரி வீரகத்தி

(ஓய்வு பெற்ற அதிபர், யா/குடமியன் அ.த.க.பாடசாலை)

*மேன்மை மிக்க ஆசிரியை அவர்களுக்கு*
*முப்பத்தோராம் நாளில் எமது உளம் நெகிழ்ந்த அஞ்சலிகள்!*

- பட்டப்பின் கல்வி டிப்ளோமா
ஆசிரிய மாணவர்கள்,
(முதலாம் வருடம்-பகுதிநேரம்.)
யாழ். பல்கலைக்கழகம்.

(19240)


SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SHARP be sharp



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
Browns Electronics Live it up
BG Browns Group of Companies
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150
TNT Grafix


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்.பாடசாலைகள் சாதனை

வவுனியா,ஜூன்18

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கிடையில் வவுனியாவில் நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்றன.

15 வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் -

17 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த வித்தியாலயம் முதலாம் இடத்தையும் வட இந்து மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும்-

19 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் - தட்டிக்கொண்டன.

இந்தப் பாடசாலைகள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஐ-3)

# 'வெண்புறா' செயற்கை உறுப்பு நிறுவனத்தின் ஆண்டுவிழா

கிளிநொச்சி,ஜூன்18

'வெண்புறா' செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள 'வெண்புறா' மையப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் 'வெண்புறா' நிறுவனம் 1993ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கடந்த காலங்களில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களினால் அங்கங்களை இழந்தவர்களுக்கு இந்த நிறுவனம் செயற்கை உறுப்புக்களை தயாரித்து வழங்கி வருகிறது.

அத்துடன், கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் மக்களிடையே இந்த நிறுவனம் நடத்தி வருவதுடன், அவயவங்களை இழந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகளையும் வழங்கி வருகிறது. (ஒ-10)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்(பேச்சி அம்பாள்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் அலங்கார உற்சவம் இடம்பெறும்.

உற்சவ தினங்களில் தினமும் இரவு 8.00மணிக்கு இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கந்த சத்தியதாசன் தெய்வீக சொற்பொழி வாற்றுவார். (ஐ)

## ஆமை இறைச்சி விற்பனை

குருநகர்,ஜூன்18

குருநகர் பகுதியில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆமை இறைச்சி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சுமார் இரண்டரைக்கிலோ நிறையுடைய ஆமை இறைச்சிப் பங்கு ஒன்று ரூபா 500 ஆக விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவித்தனர். (ஒ-51)

## நூலக கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் சுன்னாகம் பொது நூலகத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை மூன்று தினங்கள் நூலகக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சமாதான நீதிவானாக
இன்று பதவிப் பிரமாணம்
செய்துகொள்ளும்
**அரியாலையூர் சிவநாமம் சிவதாசன்**
அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய
மக்கள் சார்பாக
செ.செல்வநாதன், ஐ.வரதராஜா, இ.பாரதிதாசன்,
நா.சுகுணதாசன், ஐ.முருகதாசன், தி.சிவானந்தன்,
ஐ.குமரதாசன், திருமதி நா.புஸ்பமணி.
(19251)


## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள், பழக விரும்புபவர்கள் தேவை. உடனே நேரில் வரவும்.

த.குமாரசாமி அன் சன்ஸ்,
248 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(19196)

## உயிரியல் வினா விடை

கொழும்பிலுள்ள பிரபல உயிரியல் ஆசிரியரால் வெளியிடப்பட்ட A/L உயிரியல் மாதிரி வினாத்தாள் விடைகளுடன் ரூபா 65/- இல்லிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
யாழ்ப்பாண வீதி, நெல்லியடி.
தொலைபேசி இல :- 226-3223
(19246)




உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம
**சங்கானை அருள் மிகு ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபட்ச மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

ஆனித்திங்கள் 2ஆம் நாள் 16.06.2003 திங்கட்கிழமை கிரியாகால நிகழ்வுகள் ஆரம்பமாகி - யாக ஹோமபூசைகள் இடம்பெற்று ஸ்ரீ காளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தனம் செய்து 17.06.2003 செவ்வாய்க்கிழமை (தைலாப்பியங்கம்) எண்ணெய்க்காப்பு வைபவங்களைத் தொடர்ந்து இன்று (18.06.2003) புதன்கிழமை திருவோண நட்சத்திரமும் பஞ்சமித் திதியும் சிங்க லக்கினமும் கூடிய முற்பகல் 10 மணி 9 நிமிடம் முதல் 11 மணி 45 நிமிடம் வரை கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

**சூடமுழுக்கு கும்பாபிஷேகம்**

இடம்பெறுவதுடன் தொடர்ந்து 12 தினங்களும் காலை மண்டலா அபிஷேகமும், மாலை சுவாமி எழுந்தருளி வீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். பூர்த்தி தினமாகிய 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 1009 சங்குகளால் அபிஷேகமும் மகேஸ்வர பூசை அன்னதானமும் இடம்பெறும். மாலை திருவூஞ்சலும் அழகிய பூந்தண்டிகையில் அம்பிகை வீதி வலம் வந்து அடியார்களுக்கு திருவருள் பாலிப்பார். அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பிகையின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா பிரதமகுரு,
சிவாகமகிரியாரட்ண
சிவ ஸ்ரீ.கதிர்கிருஷ்னேஸ்வரக் குருக்கள்,
புற்கை தின்னிப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு.

அலயக்குரு
**சிவ ஸ்ரீ. ப.சிவக்குருக்கள்**
காளி கோயில், சங்கானை.

- ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானம்,
சங்கை நகர்.
(19250)

## தவறிவிட்டது

எனது நீல நிறமுடைய பணப்பை முக்கிய ஆவணங்களுடன் முகமாலைச் சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோசி றெஸ்ரோறன்ற் (மணியம் கட்டடம்) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். உரிய சன்மானம் வழங்கப்படும்.

T.P- 021 - 222 5899


**நாகம்ஸ் சுன்னாகம்**
விஜய். மீராஜஸ்மின். கருணாஸ் நடித்த
**புதிய கீதை** (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.)
(19242)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந்த், சௌந்தர்யா,
செந்தில், கவுண்டமணி நடித்த
**சொக்கத்தங்கம்** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BEHIND ENEMY LINES
(C28291)

**லஷ்சுமி சினிமா** இணுவில்



விஜய், சினேகா மற்றும் பலர் நடிப்பில்
**வசீகரா** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(19183)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.



K.S.ரவிக்குமாரின்
**பாறை** (ரீலஸ்)
சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**லிபேட்டி** அச்சுவேலி



புதிய வெளியீடு
தினசரி காட்சி
3.00, 7.00 (பு.நே)
சத்தியராஜ் மகன்... சிபி, ஷெரீன், நாசர் நடித்த
**ஸ்ருடன்ட் No 1** (ரீலஸ்)
STUDENT No 1
இந்தியாவில் அதிகநாள் ஓடிய வெற்றிப்படம்
தினசரி காலை 11.00 மணி



THE SCORPION KING
(சண்டைப்படம்)
(C728435)



# நந்திமார்க் ஓடுகள்



**லக்ஸ்சுமி றேடேஸ்**
274, கண்டி வீதி,
சாவகச்சேரி.

எமது ஸ்தாபனத்தில்
சிறந்த தரம் வாய்ந்த நந்திமார்க் ஓடுகளை
ஓடர்செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**கணேசா ஹாட்வெயர்ஸ், லக்ஸ்சுமி றேடேஸ்,**
274, 276, கண்டி வீதி, சாவகச்சேரி.


## குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம் 55ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம் : 22.06.2003 ஞாயிறு காலை 9.00 மணி**
**இடம் : உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.**

### நிகழ்ச்சிகள்

01. புதுவருடச் செயலவை தெரிவு.
02. மீளக்குடியமர அனுமதிகோரும் தீர்மானம் நிறைவேற்றுதல்.
03. குரும்பசிட்டியைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் இங்கு சமுகமளிக்கும் பெற்றோர் மூலம் கற்றல் உபகரணங்கள் வழங்கல்.
04. 2001, 2002ஆம் ஆண்டுகளில் குரும்பசிட்டியைச் சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் சித்தி, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கல்.
(இம் மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர்களிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களை பெற்று 21.06.2003இற்கு முன் தலைவர் அல்லது செயலாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும்).

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ.சி.நடராஜா, தலைவர். (19245) து. கலியுகவரதன், செயலாளர்.

## 21 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



மலர்வு 18 - 11 - 1940
உதிர்வு 29 - 05 - 2003

**அமரர் வீரவாகு முருகையா**

நெஞ்சம் மறக்குமோ ஐயா!
பக்கத்திலிருந்து எம்மைப் பாசத்துடன் பார்த்திருந்து
பல்கலையும் பயிற்றுவித்து பல்கலையும் செல்ல வைத்து
பண்புடனும் பலத்துடனும் பார்புகழ வாழவைத்து
பரிதவிக்க எம்மை விட்டுப் பிரிந்து சென்ற உம் நினைவை
நெஞ்சம் மறக்குமோ ஐயா!

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

உங்கள் பிரிவால்துயருறும்:
குடும்பத்தினர்.
(19247)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் குருநாதபிள்ளை

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் குருநாதபிள்ளை அவர்கள் 16.06.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசர்(சாத்திரி சுப்பையா) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற குருநாதபிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னசோதிப்பிள்ளை, கிளி மற்றும் சிவப்பிரகாசம், சீதாலெட்சுமி, திருச்செல்வம், பராசக்தி (இந்தியா), சுந்தரலிங்கம், கனகலிங்கம்(கனடா), மங்கையர்க்கரசி, திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்ற கிருதகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சறோயினிதேவி, அருமைநாயகம், யோகம்மா, முத்துக்குமார் (இந்தியா), சறோயினி (தாதிய உத்தியோகத்தர், யா/போதனாவைத்தியசாலை), பரமேஸ்வரி (கனடா), சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, அன்னப்பிள்ளை மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.06.2003 செவ்வாய்க்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

5 ஆம் யூனிட்,
யோகபுரம்,
மல்லாவி.

தகவல்:
கு.சுந்தரலிங்கம் - மகன்
(நேரக்காப்பாளர், புங்குடுதீவு தனியார் சிற்றூர்தி)-
(19249)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் சில மாதங்களில் பெரும் பூகம்பம் ஏற்படுமா?

## புவிச்சரிதவியலாளர்கள் மறுப்பு

கொழும்பு,ஜூன்18

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இன்னும் சில மாதங்களில் பூமியதிர்ச்சி ஏற்படும் என்று தெரிவிக்கப்படும் கூற்றுக்களை புவிச்சரிதவியல் பணியகம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

எந்தவொரு விஞ்ஞானியும் பூகம்பம் குறித்து முன்கூட்டியே ஊகம் தெரிவிக்கமுடியாது என்றும் - இந்த பூமியதிர்வு குறித்து ஊகம் தெரிவித்துள்ள லலித் விஜியவர்த்தன பதிவு செய்யப்பட்ட புவிச்சரிதவியலாளர் அல்லர் என்றும் - பணியகத்தின் பிரதிப்பணிப்பாளர் அத்துளமுத்தன் கொட்டுவ தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைந்துள்ள தன்மையைப் பொறுத்து பாரிய நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியம் இல்லை என்று புவிச்சரிதவியலாளர் நளின் த சில்வா தெரிவித்தார். ஜப்பானிய உதவித் திட்டத்தின் [illegible] பூமியதிர்வை மதிப்பீடு செய்யும் [illegible] உபகரணம் இலங்கைக்கு வழங்கப்பட்டிருப்பதாக பேராசிரியர் எஸ்.தகநாயக்கா தெரிவித்தார்.

இரத்தினபுரியில் அண்மையில் நிகழ்ந்த மண்சரிவுகள் அனைத்தும் பூமிசரிவுகள் அல்ல என்றும் புவிச்சரிதவியலாளர் குழு ஒன்று கூறுகிறது. மலைகளின் உதிர்வே மண்சரிவுக்குக் காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

---

### அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பினர்.

இவற்றுக்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க -

"மேற்குறிப்பிட்ட அறிக்கைகளில் முரண்பாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆயினும், அச்சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இன்னமும் அறிக்கை தரவில்லை. கண்காணிப்புக் குழு அறிக்கை தந்த பின்னரே இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராய்வோம்.

"கப்பல் தாக்குதல் சம்பவம் நடந்து முடியும்வரை அது பற்றி பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியாது.

சம்பவம் நடந்து முடியும் வரை அதுபற்றி அவருக்கு அறிவிக்கப்படவுமில்லை. இந்தக் காரணங்களை எல்லாம் நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

- இவ்வாறு பிரதமர் சொன்னார்.

இச்சந்திப்பில், டோக்கியோ மாநாடு, கிடைத்த உதவிகள் ஆகியவை குறிதும் ஆராயப்பட்டது.

அப்பொழுது, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி குறித்து குறிப்பிட்ட பிரதமர், வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகள் விடுதலைப் புலிகளையும் இணைத்தே மேற்கொள்ளப்படும் எனவும், இடைக்கால நிர்வாக சபையை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சொன்னார்.(ஐ)

---

### பொ.ஐ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

ராகம, எல்பிட்டிவல என்ற இடத்திலுள்ள தனது வீட்டில் சுனில், தொலைபேசியால் பேசிக்கொண்டிருந்தார் என்றும் -

அப்போது வீட்டுக்குள் புகுந்த சிலர் அவரை சுட்டுக்கொன்றனர் என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

---

### அஸ்கிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டில் 28ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்.கிறிஸ்தவ சபை மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் மாநாட்டில் மகாநாயக்கர் பங்குபற்றி உரையாற்றுவார்.

அந்த அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி வண.மஹகஸ்கடவல பன்னாசார தேரர், அந்த அமைப்பின் பொது மக்கள் தொடர்பு அதிகாரி வண. ஜோஹான தேவாநந்த ஆகியோர் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவர்களின் அழைப்பின் பேரில் வரும் மகாநாயக்கர் சமாதான நடவடிகைகள் குறித்து முக்கிய உரை நிகழ்த்துவார்.

தற்சமயம் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள், மக்கள் மீள் குடியமர்வு, வடக்கு-கிழக்கு பொருளாதாரத்தை கட்டி வளர்த்தல், நிலையான சமாதானத்துக்கான தீர்வு யோசனை ஆகியன குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட விருக்கின்றது.

---

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு அறிக்கைகளின்படியும் புலிகளின் கப்பல் மூழ்கிய விதம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசுக்கும் சரியான தீர்மானத்துக்கு வர முடியாதிருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இக்கப்பல் பற்றிய தகவல் அறிவிக்கப்பட்ட உடனேயே போர்நிறுத்த ஒப்பந்த விதிகளின்படி கண்காணிப்பாளர் ஒருவரையும் அழைத்துச் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்படையின் அதிகாரிகளின் பிரதானிக்கு தான் பணிப்புரை விடுத்ததாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்திருக்கிறார்.

"கடற்படைத் தளபதி நாட்டில் இல்லாததால் அதிகாரிகளின் பிரதானிக்கு நேரடியாக பணிப்புரை விடுத்தேன். ஆயினும், அந்த பணிப்புரையின்படி கண்காணிப்பாளர்கள் புலிகளின் கப்பல் இருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்படவில்லை" எனவும் மாரப்பன கூறியிருக்கிறார்.

இச்சம்பவம் பற்றிய அறிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நாளை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

---

### போரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் இது தொடர்பான மனுவைக் கையளித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருக்கான இந்த மனுவை, அரசியல்துறை நடுவப் பணிமனைப் பொறுப்பாளரிடம் கையளித்த பிரதிநிதிகள், படையினரது நடவடிக்கைகள் தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இதேபோன்ற ஒரு மகஜரை முல்லை கடலோர மக்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளித்திருந்தனர். (ஐ-9)

---

### கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய காவலரண்களை பார்வையிட்டார்.

படையினர் புதிய காவலரண்களை அமைப்பது, தேடுதல் சோதனைகளை நடத்துவது மீண்டும் போர்சூழல் உருவாகின்றதா என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்று விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் தயா கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் தெரிவித்தார். (ஐ-70-173)

---

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்திருக்கவில்லை என்பதை சபாநாயகர் நேற்று அறிவித்திருந்தார்.

அதற்குப் பின்னர் சபாநாயகருக்கு அது கிடைத்தால் - அனேகமாக இன்று - அத்தீர்ப்பை அவர் சபையில் வாசிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், உயர் நீதிமன்றத் தீர்ப்பு, அரசின் உத்தேச சட்டவரைவை சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என்பதற்குச் சாதகமாகப் பெரும்பாலும் வராது என்ற அச்சம் அரச வட்டாரங்களில் உள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளோடும், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அனுமதியுடனுமே இந்தச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றமுடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அத்தகைய நிலை ஏற்பட்டால் உத்தேச சட்டத் திருத்தத்தின் விவாதத்தை நாடாளுமன்றத்தில் நடத்தாமல் அத்தோடு கைவிட அரசுத் தரப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது. அவ்வாறான இக்கட்டு ஏற்பட்டால், முன்னைய அறிவிப்புப்படி சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்வரும் 25ஆம் திகதி அரசு நடத்தியாக வேண்டும். ஆனால், அதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

எனவே-சம்பந்தப்பட்ட சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியாத சிக்கல் ஏற்படும் பட்சத்தில் - அந்த உள்ளூராட்சித் தேர்தலகளை மேலும் சில காலத்துக்கு ஒத்திவைப்பதற்கான சாத்தியங்கள் குறித்து அரசுத் தரப்பு சிந்திப்பதாகத் தெரிகின்றது.

அமைச்சரவையின் விசேட தீர்மானம் ஒன்றின் மூலமோ அல்லது உள்ளூராட்சி அமைச்சரின் தனித்துவமான உத்தரவு ஒன்றின் மூலமோ அதனைச் செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றது.

இவ்வாறான சிக்கல்கள் ஏதும் இல்லாமல் சாதாரண பெரும்பான்மையுடன் இந்தச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அந்தச் சட்டத் திருத்தத்தின் மீது இன்று நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட்டு அது உடனடியாகவே நிறை வேற்றப்படும் என்றும் -

அதனடிப்படையில், ஏற்கனவே கோரப்பட்டுள்ள வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்பட்டு புதிய வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் - அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

---

### போராளிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தி அவர்கள் மீது தாக்குவது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்பன உடன் நிறுத்தப்படவேண்டும்.

★ பாதுகாப்பு என்ற போர்வையில் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் இராணுவ நெருக்கடிகளைக் கொடுப்பதும், புதியபடை முகாம்களை நிறுவுவதும் யுத்தநிறுத்த மீறலாகும். இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

★ எம் மீது கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது வழமையான பல்லவிதான். கொலைகளுக்கும் எமது இயக்கத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் சில கோரிக்கைகள் தொடர்பாக மறுதரப்பாருடன் பேசி முடிவுகளைத் தெரிவிப்பதாகக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். (ஐ-3)

---


எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமாரின்
பாறை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(19248)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார் நடித்த
பாறை
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்
(C/28462)

Barbara Mulvaney
Computer Training Center
பிரிவு IIIற்கான புதிய வகுப்புக்கள் 25.06.03 அன்று ஆரம்பமாகவுள்ளது
பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் அச்சிடுவதற்கான பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
123,Temple Road, Jaffna. T.P: 5971

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
BY:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: வியாழன்
19-06-2003 3.30 p.m.
(19191)

மீண்டும் யாழ்நகரில்
இன்று முதல் கோசி றெஸ்ரோரன்ஸ், உங்கள் நாவுக்கு ருசியான சைவ, அசைவ உணவு வகைகளை வழங்குகிறது.
கோசி றெஸ்ரோரன்ஸ்
No.15, மணியம்ஸ் கட்டடம்,
சறாமபயடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி, T.P.:-021 222 5899
(19252)






வெளிவந்து விற்பனையாகின்றது!
க.சு. ஆனந்தனின் வெளியீடுகள்
A/L மாணவர்களுக்கு
- தமிழ் வழி - (பரீட்சை வழிகாட்டி)
- செய்யுள் தொகுப்பு
- உரைநடைத் தொகுப்பு
- திருவடி சூட்டுப்படலம்
- தேர்ந்து எடுக்கப்பட்ட சிறுகதைகள்
- நாகம்மாள் நாவல்
- பாரதியார் கவிதைகள்
- திருக்குறள்

O/L மாணவர்களுக்கு
- தமிழ் வழி - (பரீட்சை வழிகாட்டி)
- தமிழ் மொழியும் இலக்கியமும் (கட்டாயமானது)
- சந்தர்ப்பம் கூறல் (கட்டாயமானது)

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-28457)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org